


291. ஸ்ரீ வைஷ்ணவ சந்யாசி!

ராமன் பெருமையைக் குறித்தும், அவனுக்கு அபாயம் ஏற்படா தென்பதைக் குறித்தும லட்சுமணன் எவ்வளவோ வாக்கு வன்மையோடு பேசியும், சீதை கொஞ்சமும் ஆறுதல் அடையவில்லை. அவன் பொன் மானை நம்பவில்லை என்பதும் தெரியும். ராமனைப் போக வேண்டாம் என்றும் சொன்னான்; தானே போய்ப் பார்த்து வருவதாகவும் சொன்னான். இவள் தானே பிடிவாதமாய் ராமனேதான் போய் ஆக வேண்டும் என்றாள்? இவ்வளவும் தெரிந்திருந்தும், லட்சுமணன் தேறுதல் கூறியது கேட்ட பின்பும், துயரத்தாலும் பயத்தாலும் கோபத்தாலும் அறிவு தடுமாறியதுபோல் சீதை மறுபடியும் பேசுகிறாள்.

கொஞ்சமும் தாட்சிணியம் இல்லாதவளாய், மைத்துனனை மைத்துனன் என்று பாராமல், தன்னைப்போல் ஊரைவிட்டு உற்றாரை விட்டு வந்திருக்கிறானே தம்பி அண்ணனுக்குப் பணி செய்ய என்பதையும் நினைத்துப் பாராமல், பகைவனாகவும் பங்காளியாகவும் அவன் திடீரென்று மாறி விட்டது போலக் கருதி, 'நீ நிற்கும் நிலை சரியாக இல்லை' என்று பேசத் தொடங்குகிறாள்:

'நின்றநின் நிலைஇது
　　நெறியிற்(று) அன்றெ'ன
வன்தறு கண்ணினள்
　　வயிர்த்துக் கூறுவாள்.

[நெறியிற்று அன்று என — நீதிமுறை உடையதன்று என்று. வல் தறு கண்ணினள் - கொடிய, தாட்சிணியம் பாராட்டாத, குரூரத்தன்மை யுடையவளாய். வயிர்த்து - (இங்கே) பகைமை பாராட்டி.]

இருப்பதா, போவதா?


'ஒரு நாள் பழகினவர்களும் உயிரைக் கொடுப்பார்களே? நீயோ தமையன் உயிர்போகும் ஆபத்தில் இருக்கிறான் என்பது கேட்டும் அஞ்சாமல் நின்று கொண்டிருக்கிறாயே! இனி எனக்குக் கதி அதோ எரிகின்ற காட்டுத்தீ!' என்று மேலும் கூறி, அந்தத் தீயிலே பாயப் புறப்படுகிறாள்.

ராமன் மான் வேட்டைக்குப் போனபோது தம்பியை நோக்கி, 'சீதை தனியாக இருக்கிறாள், ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்' என்று சொல்லிப் போனானல்லவா? சீதையோ அந்த ராமன் தனியாக ஆபத்திலிருப்பதாய் நம்பிக் கடுமையான சொல்லம்புகளைப் பிரயோகித்து லட்சுமணனை அந்த இடத்தை விட்டுப் போகச் செய்கிறாள். ஏன், துரத்தாமல் துரத்தி விடுகிறாள். அவனும்,

'போகின்றேன் அடியனேன்;
பொருந்தி வந்துகே(டு)
ஆகின்ற(து); அரசன்தன்
ஆணை நீர் மறுத்(து)
ஏகென்றீர்; இருக்கின்றீர்
தமியிர்' என்றுபின்
வேகின்ற சிந்தையான்
விடைகொண் டேகினான்.

[அரசன் - (இங்கே) ராமன். ஏகு என்றீர் - போ என்று சொல்லுகிறீர். இருக்கின்றீர் தமியிர் - இருக்கிறீர் தனியே.]

இருந்தாலும் ஆபத்து, போனாலும் ஆபத்து! 'நான் இங்கே இருந்தால் சீதை நெருப்பில் விழுந்து இறந்து போவாள். நான் ராமனை நோக்கிப் போய் விட்டால் ஏதாவது ஒரு பெருங்கேடு சீதைக்கு வந்துவிடும். என்ன தருமசங்கடம்!' என்று இருதலைக் கொள்ளி எறும்பு போலத் தவிக்கிறான் லட்சுமணன். இந்தத் தவிப்பிலே இவனுக்கும் தன் உயிரை விடுவது எளிதாகத் தோன்றுகிறது. சீதையும் இவனை வெறுக்கிறாள்; இவனும் தன்னை முழுக்க வெறுத்துக் கொள்கிறான்.



'இருப்பதா, இறப்பதா?' என்ற பிரசினை இருவருக்கும் ஏற்பட்டது. இந்தப் பிரசினையில், இறப்பது நலமென்று சீதை துணிகிறாள். லட்சுமணனோ இருப்பது தான் வீரம் என்று துணிகிறான். உயிர் இருந்தால்தானே சீதா ராமர்களுக்குப் பணி புரியும் பாக்கியம் பெறலாம்? ராமனுயிருக்கு ஆபத்தே இல்லை யென்று தெளிந்தவன், தான் உயிர் விடாமல் இருப்பதோடு சீதையையும் உயிர் விடாமல் தடுக்கிறான். தடுத்து, விடைகொண்டு புறப்படுகிறான்.

ஆறுதல் - தைலம் ?

சிறிது தூரம் போன லட்சுமணன் மறுபடியும் சீதையிடம் திரும்பி வந்து, 'எப்படியும் நான் போய் விடுகிறேன் அம்மா! இந்தக் காட்டிலே பெரியப்பா ஜடாயு இருக்கிறாரே, அவர் கவனித்துக் கொள்வார், ஏதேனும் நேர்ந்தால்' என்று பணிவோடு தெரிவிக்கிறான். பிறகு,

தேவர்செய் தவத்தினால்
செம்மல் ஏகினான்

[செம்மல் – செம்மையான குணமுள்ள லட்சுமணன்.]

இவ்வளவு நடந்த பின்பும் 'சீதையை விட்டுப் போகத் தோன்றுகிறதே இந்த இளைய வீரனுக்கு! ஆபத்து எவ்வளவு அபாயகரமான சமீபத்தில் காத்திருக்கிறது!' என்று உளைகிறது கவிஞன் நெஞ்சு. ஆறாத நெஞ்சு வலிக்கு ஏதோ ஆறுதல் - தைலம் பூசிக்கொள்வது போல் 'தேவர் செய் தவத்தினால் செம்மல் ஏகினான்' என்கிறான்.

வேஷ அரங்கிலே

லட்சுமணனும் அஞ்சிய ஆபத்து சமீபத்திலேதான் ஒளிந்திருந்தது. ராமன் குரலால் மரண வேதனையோடு கூடிய அலறல் சீதை காதில் விழுந்ததுபோல் பர்ணசாலைக்கு அருகிலுள்ள ஒரு பெரும் புதரில் மறைவாக இருந்து வேஷம் போட்டுக் கொண்டிருக்கும் ஆசாமி காதிலும் விழுந்தது. ஆனால் சீதையைப் போல், ராமனுக்கு ஆபத்து வந்து விட்டது என்று ராவணனும் நம்பியிருக்க முடியாது. லட்சுமணனைப் போல் ராமனுடைய தெய்விக பலத்தில் நம்பிக்கை இல்லாவிட்டாலும், 'வில் ஒன்றிற் கடிகை மூன்றில் பெரும் படையின' ரான கரதூஷணாதியர்களையும் விண்ணேறச் செய்த வீரன், கோழை வேதாந்தியான தன் ஏழை மாமாவுக்குத் தோற்றிருக்க முடியுமா? ஆகவே மரணவேதனை மாமாவுக்குத்தான் என்பது தெரியும். அந்த மாமா ராமனுக்குப் 'பராக்கு'க் காட்டித் தப்பும்போது போட்ட மாயக் கூச்சல் அல்ல அது. ராமன்



அம்புக்குத் தப்பியோட முடியாமல் பலியாகி விட்டான் மாமன் என்ற உண்மைதான் இந்தப் பத்து மூளைகளையும் தப்பிப் போக முடியுமா ?

பொல்லாத ஒரு தேவதைக்குக் கொழுத்த ஆட்டைப் பலி கொடுத்துச் சொந்த லாபம் பார்க்கும் பூசாரிபோல் மாமாவைப் பலி கொடுத்துச் சீதையைப் பெற விரும்பிய மருமகனுக்கு இப்போது ஒரு பேய்க் களிப்பு ஏற்பட்டிருக்கவேண்டும். தன் மரணவேதனைக் குரலை மாமா ராமனின் மரணவேதனைக் குரலாகக் காட்டிவிட்டானல்லவா — தன் நீண்ட காலத் துவேஷக் கணக்கைத் தீர்த்துக் கொண்டதுபோல ? போகட்டும் : இந்த நினைவுகளில் மட்டுமா பொழுது போகிறது ராவணனுக்கு? மாமாவின் 'பார்ட்டு' முடிந்துவிட்டதே மாமாவின் உயிரோடு! — இந்தக் கோர நாடகத்திலே தான் ஆடவேண்டிய காட்சி வந்துவிட்டதே! இதற்குரிய வேஷம் விரைவில் போட்டுக் கொள்வதில் தான் முனைந்திருக்கிறான் ராவணன்.

வேஷம் முற்றுப் பெறுகின்றது. சீதை லட்சுமணனைச் சீறுவதும் காதில் விழுந்து திருப்தி அளிக்கிறது. ஆனால், இந்த லட்சுமணனின் 'குதர்க்கம்', போவதும் வருவதுமாய் ஊஞ்சலாடிய செயல், ராவணனுக்கு — இந்த ஆத்திரக்காரனுக்கு எவ்வளவு வெறுப்பு விளைத்திருக்க வேண்டும்!

* * * *

'அவன் போகமாட்டானா, போகமாட்டானா?' என்று துடித்துக் கொண்டே, கையில் கமண்டலம் ஏந்தி முக்கோலும் (திரிதண்டம்) பிடித்துக் கொள்கிறான், சீதைக்குப் பிடித்த வேஷம் என்று. பத்துத் தலை, கோரப் பல் முதலான ராட்சஸக் குறிகள் மறைந்து, உடம்பும் கூனி மெலிந்து அந்த உடம்பில் காவியாடையும் கழுத்திலே தாமரை மணி மாலையும் ஏறிவிடுகின்றன.

லட்சுமணன் தலை மறைந்ததும் ஒரு ஸ்ரீ வைஷ்ணவ சந்யாசி பர்ணசாலையை நோக்கி வருகிறார். மோசத்திற்கா இந்த வேஷம்? ஆம், சீதை நம்பி மோசம் போகவேண்டுமல்லவா?



292. நடை, நடனம், நடிப்பு

'ஜடாயு கவனித்துக் கொள்ளக் கூடும்' என்று இளையவன் சீதையிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே இவர்களை மறைவிடத்திலிருந்து ஒருவன் கவனித்துக் கொண்டுதான் இருந்தான். ஜடாயு அல்ல, ராவணன்! தம்பி தலை மறையுமுன்பே, தலை ஒன்பதும் கோர ரூபமும் கோரப் பற்களும் மறைந்து விட்டன. கழுத்திலே முத்தாரம் மறைந்து தாமரை மணிமாலை ஏறி விடுகிறது! கொடிய வாள் மறைந்த கையில் இளமூங்கில் தண்டு மூன்று—காமம், வெகுளி, மயக்கம் என்ற முப்பகையும் வென்றதற்கு அறிகுறியாக! என்ன ஆச்சரியம்! அகில லோக பயங்கரன் ஒளித்திருந்த இடத்திலிருந்து பரிதாபகரமான நிலையில் தவசி ஒருவர் தண்டு கமண்டலங்களுடன் வெளிப்படுகிறார்.

நடையா, நடனமா?

ஆசாபாசங்களை அறுத்தெறிவதற்கு இந்தத் துறவி எத்தனை உண்ணா விரதங்களை அனுஷ்டித்து வந்தாரோ? ஐயோ பாவம்! ஊதித் தள்ளி விடலாமென்று சொல்லும்படி உலர்ந்த சருகுபோலக் காண்கிறதே திருமேனி,—எத்தனை நாள் பட்டினி கிடந்து இப்படி வற்றிப் போயிற்றோ?

ஊண் இல ஞமேண*
உலர்ந்த மேனியன்

என்று நாம் அனுதாபப்படும்போதே, 'எவ்வளவு தூரம் வழி நடந்த களைப்போ! தொப்பென்று விழுந்து விடுவாரோ?' என்ற பரிதாபமும் ஏற்படுகிறது.

நடக்கிறாரா, நடனம் செய்கிறாரா? குந்தி மிதித்துக் குறுநடை நடந்து வருகிறார். வீணாகானம் போன்ற இசையோடு சாமகானம் செய்து வருவது போலத் தோன்றுகிறதே, அந்த இசை யின்பத்திலேதான் அவ்வளவு கிழ வயதையும் கூனலையும் களைப்பையும் மறந்து விட்டாரா சாமியார்? குதித்துக் குதித்து நடக்கும்போதே பாடி வருவதும் ஒரு பாணியாகத்தான்

இருக்கிறது. அவர் பாடிவரும் பண் சுமந்த ஞான பக்திப் பாடல்கள் வேத கானம் போலக் காதில் ஒலிக்கின்றன :

பாணியின் நடத்திடைப்
படிக்கின் றான்என,
வீணையின் இசைபட
வேதம் பாடுவான்!

[பாணியின் நடத்திடை — தாளத்தோடு நடனம் நடக்க அதனிடையே. படிக்கின்றான் என — (இங்கே) திரும்பத் திரும்பப் பாடுகிறவன் போல; பாடுகிறான் என்று தோன்றும்படியாக. வேதம் — (இங்கே) ஞானப் பாடல்களும் பக்திப் பாடல்களும்.]

நாட்டியத்துடன் ஞான பக்தி யுணர்ச்சி நிறைந்த பாடல்களைப் பாடி அபிநயித்துக் காட்டும் வழக்கம் தமிழ் நாட்டிலே பல நூற்றாண்டுகளாக உண்டு. பஜனைகளிலும் தெய்வ நாட்டத்தை இப்படி நாட்டியம் வெளியிடுவதுண்டு. கம்பன் அனுபவித்திருக்கும் இத்தகைய நாட்டியக் காட்சிகளை இந்த ராவண சந்நியாசி வருணனை மூலமாகவும் நாம் ஊகித்துக்கொள்ள முடிகிறது.

என்ன ஆசாரம், என்ன அருள்!

இப்படிப் பாடிக்கொண்டே ஆடி வருவதுபோல் குதித்தும் மிதித்தும் தாவியும் வருவதற்குக் காரணம் கிழ வயதுதானா? வேறொன்றுமில்லையா? வழியிலே நெருப்புச் சிந்தியிருக்கிறதா, என்ன? ஓஹோ, சரிதான்: கனல்தான் காலில் படக்கூடாதா? எலும்பு முதலான அசுத்தமான பொருள் கிடந்தால், அது காலில் படலாமா? எறும்பு முதலிய சிற்றுயிர்கள் மிதிபட்டுச் சாகலாமா? ஆஹா, அந்த யதிக்குத்தான் எவ்வளவு ஜீவகாருண்யம்! என்ன ஆசாரப் பைத்தியம்! நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் :



பூப்பொதி அவிழ்ந்தன
நடையன், பூதலம்
தீப்பொதிந் தாம்என
மிதிக்கும் செய்கையன்,
காப்பரு நடுக்குறும்
காலன், கையினன்,
மூப்பெனும் பருவமும்
முனிய முற்றினான்.

[பூப்பொதி — பூமொட்டு. அவிழ்ந்து அன நடையன் — விரித்தாற் போன்ற மெதுவான நடையையுடையவன். தீப்பொதிந்தாம் என — நெருப்புச் சிதறி இருக்கிறதோ அல்லது மூடியிருக்கிறதோ என்று சொல்

னும்படி. காப்பரு நடுக்குறும் — நடுக்க முடியாத நடுக்கம் மிகுந்த. காலன் — கால்களை யுடையவன். முனிய மூற்றினன் — வெறுக்கும்படி (நரை, திரை தளர்ச்சிகளில்) முதிர்ந்தவன் ஆனன்.]

வெறுப்பா, பக்தியா?

இப்படி ஸதாசார—ஜீவகாருண்ய உணர்ச்சிகளுடன் நடை போடுவது போல் நடந்து வரும்போதே காலும் கையும் என்ன நடுக்கம் நடுங்குகின்றன! தடுக்க முயன்றால் ஆட்டம் அதிகப்படுகிறது! அந்தக் கிழ உடலும், கிழ நடையும் நடுக்கங்களும் இப்போது இரக்கத்தோடு வெறுப்பையும் உண்டாக்குகின்றன. முதுமை யென்ற அந்தப் பருவமும் வெறுக்கிறதாம் இந்த முதியவனை. ஆனல் பக்திப் பாடல்களை வேதம் போல் கீதம் இசைத்துப் பாடிக்கொண்டு நடையும் தாளமும் ஒத்து நிகழ வரும் போது, வெறுப்பு முழுவதும் பக்தி யுணர்ச்சியாக மாறி விடுகிறது.



காவியாடை, கமண்டலம், தரமரைமணி துளசிமணி மாலைகள் முதலிய சின்னங்களைப் பார்த்ததும் நமக்குப் பக்தி அதிகரிக்கவும் கூடும்; 'இவ்வளவு பக்திப் பைத்தியமா?' என்று அதிசயிக்கவும் தோன்றும்:

தாமரைக்
கண்ணை(டு) ஏர்
தவத்தின்
மாலையன்,
ஆமையின்
இருக்கையன்,
வளைந்த
ஆக்கையன்,

நாமநூல் மார்பினன்
நணுகி னன்அரோ!
தூமனத்(து) அருந்ததி
இருந்த சூழல்வாய்.

[தாமரைக் கண் — ' கமலாக்ஷம் ' என்று வடமொழியில் சொல்லும் தாமரை மணிகள். ஏர் — அழகு வாய்ந்த. தவத்தின் மாலையான் — ஜப மாலை தரித்தவன். ஆமையின் இருக்கை — ' கூர்மாஸனம் ' என்று வடமொழியில் சொல்லுகிற வைதிகப் பீடம்; இது ஆமை வடிவமா யிருக்கும். ஆக்கை — உடம்பு. நாம நூல் — பெருமை பொருந்திய பூணூல். நணுகினன் அரோ — சமீபித்து வந்து விட்டான். தூமனத்து—தூய மன முள்ள; கள்ளங்கவடு அறியாத உள்ளமுடைய. அருந்ததி — அருந்ததி போன்ற சீதை. சூழல்வாய் — பர்ணசாலையினிடத்தே.]

என்ன நடிப்பு!

திரிதண்டம்போல் கூர்மாஸனமும் புலனடக்கத்தின் ஓர் அறிகுறி. ஆமை தன் தலையையும் கால்களையும் தற்காப்பாக கூட்டுக்குள் இழுத்துக் கொள்வது போல் துறவியும் புலன்களை உள்ளடக்கிக் கொள்வது யதி தர்மம். இந்த ராவண சந்யாசி காமம் வெகுளி மயக்கம் முதலான உணர்ச்சிகளை உள்ளடக்கிக் கொள்ளும் ' சுய ராஜ்ய ' சக்தி இல்லாதவன் தான். எனினும் அந்த வேஷம் போட்டு நடிக்கும் நடிப்புத் திறனிலே நிபுணன், பெரும் பொய்யன் அரிச்சந்திர ' பார்ட் 'டிலும் நிபுணனா யிருப்பது போலே!

ஆமை உறுப்புக்களை இழுத்துக் கொள்வதுபோல் புலன்களை அடக்கிக்கொள்ளத் தெரியாவிட்டாலும் ராவணனுக்குத் தன் பத்துத் தலைகளையும், அந்தப் பொல்லாத அறிவுத்திறனுக்கு இசைந்த கைத்திறன் வாய்ந்த இருபது தடக் கைகளையும் கண்களையும் இந்தத் துறவி வேஷத்திற்குள் இழுத்து அடக்கி ஒடுக்கிக் கொள்ளத் தெரிந்து விட்டதல்லவா?

* * * *

குடுகுடுக் கிழவன் கூனிக் குறுகிக் கோணலாக நடந்து போய் சீதை இருந்த தழைக் குடிசையின் வாசலை அடைகிறான். குழறி நடுங்கிய நாவிலே சொற்கள் தடுமாற, ' இங்-கே இ-ருப்-ப-வர் யார்?' என்று கேட்கிறான். ' வாருங்கள் உள்ளே ' என்று சொல்லிக்கொண்டு எதிரே வருகிறாள் சீதை.

புனிதமான பர்ணசாலையின் வாசலில் நிற்கும் இந்தச் சந்யாசியின் வேஷமும், நடுங்கும் குரலும் பேச்சும் தேவர்களையும் மயக்கி விடுகின்றன வாம். சூதுவாதறியாத சீதையை மயக்கக் கேட்பானேன்? மாரீசனின் மாய உருவாலும் மாயக் குரலாலும் வஞ்சிக்கப்பட்டவள் மீண்டும் வஞ்சிக்கப்படுகிறாள் இந்த மாய உருவாலும் குரலாலும்.

ஆனால் இந்த மாய சந்யாசியை இப்படிச் சொற்களில் பிடித்துக் காட்டும் இப்பாடல்களிலே கேட்கும் குரல், கவிஞனின் உண்மைக் குரல்; ராவண சந்யாசியை வைத்துக்கொண்டே கடனத்திற்கு இசைந்த பக்திப் பாடல்களைப் பாடி யிருக்கிறது.



293. 'சுவாமி, எழுந்தருளுக'

சாமியார் பார்த்து விடுகிறார், தம் சொந்தக் கண்ணாலேயே. இதற்கு முன் இரவல் கண்ணால் கண்டு காதலித்ததுதானே? இன்று, இப்போது,

பொற்பினுக்(கு) அணியினைப்,
புகழின் சேக்கையைக்,
கற்பினுக்(கு) அரசியைக்
கண்ணின் நோக்கினான்.

[பொற்பு — அழகு. சேக்கை — தங்குமிடம்.]

'மூக்கைத்தானே இழந்தாள்? போகட்டும், கண்ணை எப்படிப் பயன் படுத்திவிட்டாள் நமக்காக!' என்று சாமியார் களிக்கிறார்.

ஏக்கமும் களிப்பும்

கேட்டதும் காதல் கொண்டு அவஸ்தைப் பட்டவன், உருவெளித் தோற்றம் கண்டதும் உருக்குலைந்தவன், இப்போது உருமாறி வந்து உருவம் கண்டதும், அடையும் நிலை என்ன? முதல் முதல் கண்ட பலன்:

ஏங்கினன் மனநிலை
யாதென்(று) உன்னுவாம்?
வீங்கின, மெலிந்தன
வீரத் தோள்களே!

[ஏங்கினன் — ஏங்கிப்போன ராவணனுடைய. உன்னுவாம் — எண்ணுவோம்.]

விரக தாபமும் காதற் களிப்பும் ஒருங்கே பூசலிடும் உள்ளத்துடன் சீதையைப் பார்த்ததும்,

மனமெனக் களித்தது
கண்ணின் மாலையே!

[மாலை — வரிசை.]

இரண்டு கண்களால் தான் பார்க்கிறாே இந்த அழகின் அணியை, புகழின் வாழ்வை? அப்படிப் பார்த்தால் போதுமா? ஆமை தன் ஓட்டுக்குள்ளே உறுப்புக்களை இழுத்துக் கொள்வது போல், இந்தச் சந்நியாசி வேஷத்திற்குள்ளே இருபது கண்களையும் இழுத்து அடக்கி வைத்துத் தானே இருக்கிறான்? இப்போது அவளுக்குத் தெரியாமலே பூக்குடலைக்குள் பூமாலைபோல் தயாராக இருந்த அத்தனை கண்களாலும் ஒரு பார்வை பார்த்து விடுகிறானாம். ஆசை தீர அந்த மாணிக்க மேனிக்குத் தன் 'கண்ணின் மாலை' அணிந்து களிக்கிறான், இஷ்ட மூர்த்தியை உபாஸகன் பூமாலையால் அலங்கரித்து மகிழ்வது போல, — கவிஞன் சொல்மாலை சூட்டிப் பரவசமாவது போலே.


இப்படிப் பார்த்தும் என்ன? இருபது போதுமா? — கண்ணாயிரம் வேண்டாமா? (இவ்வுணர்ச்சி கண்ணனான ராமனுக்கும் சீதை விஷயத்தில் உண்டு.) 'இமையாத கண்கள் ஆயிரம் இல்லையே எனக்கு!' என்று மீண்டும் ஏங்குகிறார் சாமியார்!

'ஏயுமே இருப(து) இங்கு?
இமைப்பில் நாட்டங்கள்
ஆயிரம் இல்லை!' என்(று)
அவலம் எய்தினான்.

[ஏயுமே — போதுமா? இமைப்பில் — இமையாத. நாட்டங்கள் — கண்கள். அவலம் — துன்பம்.]

அழகின் விலை

அந்த அழகுக் கடலுக்குத் தன் ஆயுளும் போதாதென்று தோன்றுகிறது. இத்தகைய அழகுக்கு விலையாக எந்தப் பொக்கிஷத்திலிருந்து எதைத்தான் கொடுக்கக் கூடாது?



தனக்குரிய திரிலோக ஸாம்ராஜ்யத்தை அப்படியே எழுதிக் கொடுத்து விடலாம், கையிருப்பாக ஒன்றும் கருதிக் கொள்ளாமலே! சரி, அது தான் போதுமா? அகிலலோக சக்கரவர்த்தியும் ஸர்வாதிகாரியுமான தன்னையும் அடிமையாக எழுதிக் கொடுத்துவிட வேண்டியது தான். எத்தகைய ஸாம்ராஜ்யம், எத்தகைய ஸர்வாதிகாரம்!

'தேவரும் அவுணரும்
தேவி மாரொடும்
கூவல்செய் தொழிலினர்
குடிமை செய்திட
மூவுல கமும்இவர்
முறையின்ஆள, யான்
ஏவல்செய்(து) உய்குவென்
இனி!' என்(று) உன்னினன்.

[அவுணர் — அசுரர். கூவல் செய் தொழிலினர் — கூவிச் செய்யும் குற்றேவலுக்கு உரிய வேலைக்காரர்கள். குடிமை — (இங்கே) குடி அடிமை; அதாவது குலத்தோடு அடிமை. உய்குவென் — பிழைத்திருப்பேன். உன்னினன் — எண்ணினன்.]

கிரீடம் சீதைக்கா, சூர்ப்பணகைப் பிராட்டிக்கா?

கபட சந்யாசியின் மூளை இப்போது எவ்வளவு வேகமாக வேலை செய்கிறது? மாயமான் - வேகத்திலே வேலை செய்கிறது என்றே சொல்லலாம். அந்த அபார மூளையில், இந்தப் 'பொன்மான்வேட்டை'க்காக அபூர்வமான யோசனைகள், ஆனந்தமான கனவுகள் 'திடும் திடும்' என்று பிறக்கின்றன. 'கண்கள் அதிகமாக வேண்டுமே! ஆயுள் போதாதே!' என்ற கவலை ஒரு புறம், 'ராக்ஷஸ மகா ராஜ்யத்திற்குச் சீதையை மகாராணியாக முடிசூட்டிப் பார்க்க வேண்டும்' என்ற ஆசை ஒரு புறம். 'இவளுடைய அடிகளில் குற்றேவல் செய்து பிழைக்கும் பாக்கியம் பெறவேண்டும்' என்று அந்தப் பிழைக்கும் வழி கண்ட களிப்பு ஒரு புறம்.

இதைக் காட்டிலும் விநோத விபரீத ஆசையொன்று போட்டி போடுகிறது, பூசலிடுகிறது, இந்த ஆசையுடன். இந்தச் சீதாதேவியைத் தேடித் தந்த சூர்ப்பணகா தேவிக்கே தமது சிங்காசனத்தையும் துரைத்தனத்தையும் கொடுத்து விட்டால்தான் என்ன? மூக்கறைக்கு முடிசூட்டு வைபவம் காதலில் முளைத்ததல்ல. நன்றியறிவிலே விளைந்தது.

இன்னும் ஒரு கனவு. கூந்தல் சோரச் சோகத்தில் இருக்கும் இந்த முகத்தின் மின்வெட்டே இப்படியென்றால், சந்தோஷ காலத்திலே பற்கள் சிறிது தோன்ற முத்துநகை அரும்பும்போது ஜொலிக்கும் மோகன சக்தி தான் எப்படி யிருக்குமோ? இப்படி யெல்லாம் ஆனந்த நினைவுகளிலும் கனவுகளிலும் மிதந்து கொண்டிருக்கும் ராவண சாமியாரை இதோ பாருங்கள்:

'உளைவுறு துயர்முகத்(து)
ஒளிஇ தாம்எனின்,
முளைஎயி(று) இலங்கிடும்
முறுவல் என்படும்?
தளையவிழ் குழல்இவட்
கண்டு தந்தஎன்
இளையவட்(கு) அளிப்பன்என்
அரசென்று 'எண்ணினன்.

[உளைவுறு — உளைச்சல் மிகுந்த. முனை எயிறு — சிறிது வெளித் தோன்றுகிற பற்கள். முறுவல் — புன்னகை. என் படும் — எவ்வளவு இனிமை யுள்ளதாயிருக்கும்! தளை அவிழ் குழல் — (இங்கே) சோகத்தால் கூந்தல் சோர நின்ற சீதை. இளையவள் — தங்கையான சூர்ப்பணகை.]

ராவண ஸ்வாமி!

இவ்விதமாக மோக வெறியில் முங்கி முழுகித் திசையும் கரையும் தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் சந்யாசிக்கு, 'ஐயா, உள்ளே வாரும்' என்று சீதை சொன்ன வார்த்தை முதன் முதல் காதில் விழ வில்லை. அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, 'எழுந்தருளுக சுவாமி!' என்று திரும்பவும் வேண்டிக் கொண்டபோது தான், ராவண ஸ்வாமி தம் சொப்பன லோகத்தி லிருந்து வெளிப்பட்டு அருகில் வருகிறார்!

பிரம்பினால் பின்னிய ஆசனம் ஒன்றை எடுத்துப் போட்டு, 'வீற்றிருக்க' என்று உபசரிக்கிறாள், அர்க்கிய பாத்திய ஆசமநீயம் கொடுத்து யதிபூஜை செய்வதற்காக. அந்தப் பர்ணசாலையிலே சீதை அலங்காரமாய்ப் பூமாலைகள் தொடுத்து அழகாய்த் தொங்கவிட்டிருந்த அந்தப் புனிதப் பிர தேசத்திலே புனிதவதி சுட்டிக் காட்டிய இருக்கையில் ராவணன் இருந்த தும் நடந்ததென்ன? அதற்கு முன் சீதை யதிபூஜை செய்யும் கிரமத்தை யும், அக்கிரம சந்யாசி தன் திரிதண்டத்தை ஆசனத்திற்கருகே வைத்து விட்டுப் பூமாலைகளுக்கிடையே வீற்றிருக்கும் விபரீதத்தையும் ஊன்றிப் பார்ப்போம் ஒரு பார்வை:

ஏத்தினள், எய்தலும்,
'இருத்திர் ஈண்(டு)' என்ன
வேத்திரத்(து) ஆசனம்
விதியின் நல்கினள்;
மாத்திரி தண்(டு)அயல்
வைத்த வஞ்சனும்
பூத்தொடர் சாலையின்
இருந்த போழ்தினே.

[ஏத்தினள் — உபசரித்த சீதை. எய்தலும் — (அவள்) அருகில் வந்ததும். இருத்திர் ஈண்டு — இதில் வீற்றிருக்க. வேத்திரத்து ஆசனம் — வேத்திராசனம்; பிரம்பால் பின்னிய ஆசனம். விதியின் — முறைப் படி. நல்கினள் — கொடுத்தாள். மாத் திரிதண்டு — பெருமை பொருந்திய திரிதண்டம். அயல் — பக்கத்திலே. பூத்தொடர் சாலை — பூமாலைகள் அழகாய்த் தொங்கவிடப் பெற்ற பர்ணசாலை. போழ்தினே — பொழு திலே.]

'எழுந்தருளுக சுவாமி' என்று சீதை சொல்ல ராவணசாமி எழுந் தருளி யிருந்த பொழுது நடந்ததுதான் என்ன? ஆசனத்தில் அமர்ந்த ராவணன் ஒன்றும் தெரியாதவன் போல் சீதையைப் பார்த்து, 'இந்த ஆசிர மத்திலிருக்கும் முனிவன் யார்? நீ யார்' என்றெல்லாம் கேட்கப் போகி றான். சூதுவாது தெரியாத சீதையும் பதில் சொல்லப் போகிறாள். ஆனால் அதற்கு முன்பும், கபட சந்யாசி அஞ்சாது ஆசனத்தில் வீற்றிருந்த பின்பும் நிகழ்ந்ததென்ன? பார்க்கலாமே அடுத்த வாரம்.



பி. ஸ்ரீ.

294. 'ராமன் மனைவி நான்'

புனிதமான ரிஷி வேஷம் போட்டுக்கொண்டு ராவணன் கொடிய பாவச் செய்கை செய்யப் போகிறான் புனிதவதியின் புனித ஆச்ரமத்திலே! இயற்கை கலங்கிப் போகிறதாம்; சராசரங்கள் நிலைகுலையக் குழப்பம் ஏற்படுகிறதாம். இந்தக் கொடுந் தொழில் - அரக்கனைக் கண்டதும் ஜனஸ்தானத்தில் மரங்கள் அசையாது நின்றன என்றும், காற்றும் அடங்கி நின்றதென்றும், அவன் கண்கள் பட்டதும் வேகமாய் ஓடிக்கொண்டிருந்த கோதாவரி யாறும் அஞ்சி மெல்லவே நகரத் தொடங்கிய தென்றும் ஆதிகவி வால்மீகி பகவான் கூறியுள்ளார். இதை ஒருவாறு அனுசரித்துக் கம்பன் வர்ணனை வருமாறு:

நடுங்கின மலைகளும்
மரனும்: நாஅவிந்(து)
அடங்கின பறவையும்;
விலங்கும் அஞ்சின;
படம்குறைந்(து) ஒதுங்கின
பாம்பும்,—பாதகக்
கடுந்தொழில் அரக்கனைக்
காணும் கண்ணினே!

[மரன் - மரம். விலங்கு - மிருகங்கள்.]

இலக்கிய மகாசந்தர்ப்பங்கள்

இயற்கை மனித உணர்ச்சியோடு குழம்புவது போன்ற இந்த உற்பாதம் (துர்க்குறி) இலக்கிய மாணவர்களுக்கு, வேறு மகாகவிகள் இத்தகைய மகா சந்தர்ப்பங்களில் பாடியிருக்கும் சுபாவம் மீறிய நிகழ்ச்சிகளை நினைப்பூட்டலாம்.

உதாரணமாக மில்ட்டன் மகா கவி, மனித வர்க்கத்தின் ஆதித் தாய் தந்தையர் என்று கிறிஸ்துவேதம் கூறும் ஏவாளும் ஆதாமும் பாவஞ்செய்த காலத்தில் நிகழ்ந்ததாக வருணித்திருக்கும் உற்பாதம் நினைவிற்கு வராமல் இராது.

ஆதித்தாய் கடவுளின் ஆணைமீறி மனித ஜாதிக்கே துக்கத்தையும் மரணத்தையும் தந்தபோது, அதைப் பூமித்தாய் அறிந்து புண்பட்டாளாம். இயற்கை துடித்துத் தன் சராசரங்களூடே பெருமூச்செறிந்ததாம், 'எல்லாம் போச்சே!' என்று. கடவுள் தொடக்கூடாதென்று கட்டளையிட்டிருந்த அக்கனியை ஆதித்தந்தையும் அருந்தவே, பூமி குடல் கலங்கி உடல் நடுங்கிப் போயிற்றாம். இரண்டாம் முறையும் இயற்கை ஏங்கிப் பொருமிப் பெருமூச்செறிந்ததாம். மரண காரணமான ஆதிப்பாவம் முற்றுப்பெற்றது கண்டு வானமும் தாழ்ந்து இடிக்குரலால் முணுமுணுத்துப் புலம்பிச் சோக நீர்த்துளிகள் சிந்தியதாம்.

படம்குறைந்(து) ஒதுங்கின
பாம்பும்!

என்ற கம்பன் வர்ணனைக்கு ஒப்பான வாக்கும் மில்ட்டனில் காணப்படுகிறது. 'Back to the thicket slunk the guilty serpent' என்று கம்பனுடைய கவிதை - வேகத்துடன் மில்ட்டனும் வர்ணிக்கிறான், பாம்பு படம் குறைந்து காட்டுக்குள் மீண்டும் பதுங்கிக் கொண்டதை. ஆனால் சர்ப்ப ரூபம் தரித்து வந்த சாத்தானைத்தான் மில்ட்டன் குறிப்பிடுகிறான்.

வெள்ளைக்காரரின் வால்மீகியாகிய ஹோமரும் தமது 'இலியத்' என்ற இதிகாசத்தில் இத்தகைய கற்பனை செய்திருக்கிறார். போர்த்தேவன் தன் பயங்கர உருவத்தைப் புயற் காற்று, கடுமழை என்ற போர்வைகளால் போர்த்துக்கொண்டு உயரே வட்டமிட்டு உன்னத கோபுரங்களின் மீது நின்று கர்ஜித்துத் தன் படுவேகத்தை அம்மக்கள் நெஞ்சில் ஊற்றிவிட்டானாம். பிறகு அருகேயுள்ள மனோகரமான குன்றுக்குத் தாவி ஸிமோய் (Simois) நதியை நோக்கி அட்டகாசம் செய்ய, அக்குன்று அதிர்ந்ததாம்; வேகமாய்ச் செல்லும் அந்த நதியும் ஸ்தம்பித்துப் போயிற்றாம், வால்மீகியின் கோதாவரி நதி போல.

உலக மகா கவிகளுக்கு மகா சந்தர்ப்பங்களில் இசைக்கும் இதய மகா நாதத்திற்கு இத்தகைய உற்பாத வர்ணனைகளும் சான்றாகும். இம்மகா கவிகளைப் பின்பற்றி நம் அருமைத் தேசிய கவி பாரதியாரும், திரௌபதியைத் தீய நோக்கத்துடன் துரியோதனன் ராஜ சபைக்கு அழைத்து வரச் சொன்ன சந்தர்ப்பத்திலே 'ஜகத்தில் உண்டான குழப்ப'த்தை வர்ணித்திருக்கிறார். இதுவும் வாசகர்களின் நினைவிற்கு வரக் கூடும்.

'நீர் யார்?'

இயற்கை இப்படி 'அதர்மக் குழப்ப'மடையச் சீதா ராவண சம்வாதம் தொடங்குகிறது. பர்ணசாலையைக் குறித்தும் எஜமானரைக் குறித்தும் 'நீர் யார்?' என்று தன்னைக் குறித்தும் ராவண சந்யாசி கேள்விகள் கேட்டதும், 'இந்த விருந்தினர் இங்குள்ள நிலைமை ஒன்றும் தெரியாதவர்' என்ற எண்ணத்துடன் சீதை பதில் சொல்லுகிறாள். மகிழ்ச்சியால் விரிந்த கண்களுடன் உத்ஸாகமாகவே பதில் சொல்லத் தொடங்குகிறாள்:

பெருந்தடங் கண்ணவள்
பேசல் மேயினாள்.

[பெருந்தடங்கண்ணவள் — உத்ஸாகத்தால் மிகவும் விரிந்த கண்களை யுடைய சீதை. பேசல் மேயினாள் — பேசத் தொடங்கினாள்.]

மாரீசனின் மான் வேஷம் ஏமாற்றியதுபோல் ராவணனின் சாமியார் - வேஷமும் சீதையை ஏமாற்றி விடுகிறது. நாணிக் கூசித் தயங்கிப் பேசாமல் கிழச் சந்யாசியை நோக்கி நிமிர்ந்த பார்வையுடன்,

தயரதன் தொல்குலத்
தலைவன், தம்பியோ(டு)
உயர்குலத்(து) அன்னைசொல்
உச்சி ஏந்தினான்

[தொல்குலம் — பழமையான குலம். தலைவன் — ராமன். அன்னை — கைகேயி.]

என்று பேசும் தோரணையைத்தான் பாருங்கள். 'உயர்குலத்து அன்னை':— கைகேயியைக் காதலன் கண்கொண்டு சீதை தூர நோக்காக நோக்கும் நோக்கு.

பிறகு, தாசரதியின் பெயர் முனிவர் கூட்டத்தில் பிரசித்தமானதால் இந்தப் பெரியாருக்கும் தெரிந்திருக்குமே என்கிறாள் :

'பெயரினைத் தெரிகுதிர்
பெருமை யிர்!' என்றாள்.

[தெரிகுதிர் — தெரிவீர். பெருமையீர் — பெரியாராகிய நீர்.]

'யார் மகள் ?'

அதற்கு ராவணப் பெரியார் சொல்லுகிறார், 'நான் கேள்விப்பட்



டிருக்கிறேன்; நேரில் கண்டதில்லை. கங்கை பாயும் கோசல நாட்டில் நானும் ஒரு தடவை வந்து தங்கியிருக்கிறேன்' என்று. பிறகு,

'வாள் – தடங் கண்ணினீர்
யாவன் மாமகள்,
காட்டிடை அரும்பகல்
குறிக்கின் றீர்?' என்றான்.

[வாள்தடம் கண்ணினீர் - வாளாயுதம் போன்ற பெரிய கண்களை யுடைய நீர். மாமகள் - திருமகள்.]

'நீர் யார்?' என்று ஏற்கெனவே கேட்டுத் தசரத ராஜகுமாரனின் தர்மபத்தினி யென்று அவள் குறிப்பாய் உணர்த்தியதும், 'நீர் யார் மகள்?' என்று மீண்டும் வினவுகிறான். இந்தக் கேள்விக்குச் சீதை முன்னிலும் உத்ஸாகத்துடன் பதில் அளிக்கிறாள்:

'அனகமா நெறிபடர்
அடிகள்! நும்அலால்
நினைவதோர் தெய்வம்வே(று)
இலாத நெஞ்சினன்
சனகன்மா மகள்,பெயர்
சனகி, காகுத்தன்
மனைவியான்' என்றனள்
மறுவில் கற்பினள்.

[அனகமா நெறி – தோஷமில்லாத சிறந்த நன்னெறி. படர் அடிகள் – ஒழுகுகின்ற முனிசிரேஷ்டரே. நும் அலால் – உம்மைப் போன்ற முனிவர்களே யல்லாமல். மாமகள் – (இங்கே) மூத்த பெண். சனகி – ஜானகி. காகுத்தன் – ககுஸ்தன் என்ற அரசன் மரபில் தோன்றினவன். மறுவில் – மாசுமறு இல்லாத.]

'யாவன் மாமகள்?' என்ற கேள்விக்கு, 'ஜனக ராஜகுமாரி' என்று உத்ஸாகமாய்த் தன்னை அறிவித்துக் கொண்டதுடன் அமையாது, அதைக் காட்டிலும் 'ராமன் மனைவி' என்று தன்னை அறிவித்துக் கொள்வதில் விசேஷமான பெருமையை விரும்புகிறாள் சீதை.

ஆனால் கணவன் பெயரை எப்படிச் சொல்லுகிறது என்ற இடர்ப்பாடு மறுபடியும் ஏற்படத்தான் செய்கிறது. இந்தச் சந்யாசி ஏதோ கேள்விப் பட்டிருந்ததாகச் சொன்னபோதிலும் பெயரைக் கேள்விப்பட்டதாகத் தெளிவாய்ச் சொல்லவில்லை. ஆகவே 'காகுத்தன்' என்ற வம்சப் பெயரை உபயோகித்து 'நான் ராமன் மனைவி — ராமன் மனைவியாக்கும் நான்!' என்பதைத் தெளிவு படுத்துகிறாள்.

'ராமன் மனைவி நான்' என்று சீதை பெருமைப்பட, 'லங்கேசுவரன் அவன்' என்று ராவணேசுவரன் பெருமைப்படும் அந்த 'ராவண காவிய'த்தை அடுத்த வாரம் கேட்போம்.

அதற்கிடையே தீவிர ஞானிகளான முனிவர்களிடம் தெய்வ பக்தி செலுத்தும் தன் தந்தையாரைக் குறித்து, 'நும் அலால் நினைவதோர் தெய்வம் வேறு இலாத நெஞ்சினன்'—உம்மைத் தவிர வேறு தெய்வம் நினையாத நெஞ்சினன்—என்ற சீதையின் சூதுவாதறியாத நெஞ்சினை நன்கு நினைத்துப் பார்ப்போம். இந்த நெஞ்சிலே அந்த 'ராவண காவியம்'...... — ஏன் இந்த அவசரம்?



295. ராவணன் பாடும் ராவண காவியம்

'நீர் யாவன் மாமகள்?' என்ற கேள்விக்குச் 'சனகன் மாமகள்' என்றும் 'காகுத்தன் மனைவி யான்' என்றும் பதில் கிடைத்தபின் சந்யாசி, 'இனி என்ன கேட்கலாம்? எப்படிச் சம்பாஷணையைத் தொடரலாம்?' என்று எண்ணமிடலானான், வஞ்சிய உள்ளத்துடன்.

சீதைக்கோ அந்தக் களைத்த கிழத் தோற்றத்தின் மீது பரிதாபம் ஏற்பட்டு விட்டது. 'எவ்வளவோ வெப்பமான பாலைவனப் பாதைகளில் அலைந்து திரிந்திருக்கிறார், தம் யாத்திரா மார்க்கத்திலே, இந்தத் தள்ளாடிய பருவத்திலே — பாவம்! இந்தக் காட்டில் தவங்கிடந்து இனி மோட்ச மார்க்கத்திலே தான் ஏறிப்போக எண்ணுகிறார்!' என்று எண்ணமிடுகிறாள். உரக்கச் சிந்திப்பதுபோல் சிந்தனையை வெளியிட்டு, 'இந்த ஸ்வாமி தொலை தூரத்திலுள்ள எந்த ஆசிரமத்திலிருந்து எழுந்தருளுகிறாரோ? அல்லது எந்தத் தீர்த்த யாத்திரா மார்க்கத்திலே நீளத் திரிந்து வருகிறாரோ?' என்று மேலும் அறிய விரும்புகிறாள்.

சுய கதா காலட்சேபம்

'யாத்திரிகர் தம் யாத்திரைக் கதையை நீளச் சொல்லிக்கொண்டே போவார்; லட்சுமணன் தமையனை அழைத்து வரும்வரை ஒரு நல்ல பொழுதுபோக்கு — ஸத் காலக்ஷேபம்; கவலையில் கழியும் அவப்பொழுதும் தவப் பொழுதாகுமே!' என்று சீதை எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் இந்த ரிஷி எந்த ஆசிரமத்திலிருந்து புறப்பட்டதாய்ச் சொல்ல முடியும்? எந்தத் திவ்ய தேச யாத்திரை குறித்துப் பேச முடியும்? நீண்ட கதை சொல்லத்தான் நேரம் ஏது? ராமலட்சுமணர் திரும்பி வருவதற்குள் கதை முடிந்து கத்தரி காய்த்துக் கையிலும் கிடைக்க வேணுமே? ஆகவே, தன் பெயரை வெளியிடாமல் பிறர் கூறுவது போலத் தன் அருமை பெருமைகளையும், அதிகார ஆடம்பர வைபவங்களையும் வெளியிடத் தொடங்குகிறான்.

சுருக்கச் சொன்னால், சுய கதா காலட்சேபம் ஆரம்பமாகிறது, தந்திரமாகச் சுந்தரமாக—ஏதோ, ஒரு 'ஹிப்னடிஸ - மெஸ்மரிஸ' மந்திரம் போலே:

இந்திரற்(கு) இந்திரன்,
எழுத லாகலாச்
சுந்தரன், நான்முகன்
மரபில் தோன்றினன்,
அந்தரந் தோடும்எவ்
உலகும் ஆள்கின்றான்;
மந்திரத்(து) அருமறை
வைகும் நாவினன்.

[இந்திரற்கு இந்திரன் – தேவேந்திரனுக்கும் மேலான ராட்சஸேந்திரன். எழுதல் ஆகலா – (சித்திரத்தில்) எழுத முடியாத. நான்முகன் மரபில் தோன்றினன் – பிரம்ம குலத்தில் பிறந்தவன். அந்தரம் – மேலுலகம். மந்திரத்து அருமறை – மந்திரங்களோடு கூடிய அருமையான வேதங்கள். வைகும் – தங்குகிற.]

கதை நடக்கிறது

இப்படி ஆரம்பமாகும் கதா காலட்சேபத்திலே சீதை பக்தி சிரத்தைகளோடு ஈடுபட்டுத் தானகவே கதாநாயகன் பெயரை ஆவலோடு விசாரிப்பாள் என்று எதிர்பார்க்கிறான் ராவண முனி. அந்தக் கேள்வியை அளவுக்கருவியாகக் கொண்டு அவள் தன்மீது கொள்ளும் காதலை உள்ளபடி அளந்து கொள்ளலாமென்றும் மனம் கோட்டை கட்டுகிறது.

கதாநாயகனிடத்தில் அரச மாட்சியுடன் பிரம்ம குலப் பெருமையும், அதற்கிசைந்த அபார வைதிக ஞானமும் கலந்து காணப்படுகின்றனவாம். அப்பேர்ப்பட்டவன் வெள்ளியங்கிரியை வேரோடு, அந்தச் சிவலோகநாதனோடு, ஆடும் பிரானோடு ஆட்டிப் பறித்துத் தூக்கி எடுத்து விட்டானும். திசை யானைகளின் தந்தங்களை விசையாகப் பொடித்து ஊதிவிட்டானும், காற்றுவாக்கிலே. பரம வைதிகத்தோடு எத்தகைய புஜபல பராக்கிரமங்கள்! நாவிலே வேத வேதாந்தங்கள்; தோளிலோ வேதாந்தம் வற்றச் செய்யாத தசைக் கொழுப்பு — வீரவெறி:

ஈசன்ஆண்(டு) இருந்தபேர்
இலங்கு மால்வரை
ஊசிவே ரொடும்பறித்(து)
எடுக்கும் ஊற்றத்தான்;
ஆசைகள் சுமந்தபேர்
அளவில் யானைகள்
பூசல்செய் மருப்பினைப்
பொடிசெய் தோளினன்.

[ஈசன் – சிவபெருமான். ஆண்டு இருந்த – ஆட்சி செலுத்தி வீற்றிருந்த. பேர் இலங்கு மால்வரை – பெயர் பெற்ற பெரிய கைலையங்கிரி. ஊசிவேர் – சல்லிவேர். ஊற்றத்தான் – சக்தி வாய்ந்தவன். ஆசைகள் – (இங்கே) திசைகள். பேர் அளவில் யானைகள் – பிரம்மாண்டமான யானைகள். பூசல் செய் – எதிர்த்துத் தாக்கிப் போர் செய்வதற்கு உரிய. மருப்பு– தந்தங்கள்.]

கதையின் வேகம்

இந்த வீராதி வீர ராஜாதி ராஜனின் வர பலங்களையும் செல்வச் சிறப்பையும் கல்விச் சிறப்பையும் குணாதிசயங்களையும் சுவைபடச் சித்திரிக்கிறது சுயபுராணம். குண சௌந்தரியத்தோடு போட்டி போடும் ரூப சௌந்தரியத்தைச் சீதை மறந்து விடாமலிருக்க வேண்டுமென்று பௌராணிகர் அடிக்கடி அன்புகூர்ந்து நினைப்பூட்டுகிறார்.

மேனகை, திலோத்தமை முதலான அப்ஸர ஸ்திரீகள் பக்தியோடு செருப்பிடுதல் முதலிய திவ்ய கைங்கரியங்கள் செய்யக் கொலுவீற்றிருக்கும் மகா மாட்சிமை தங்கிய திரிபுவன சக்கரவர்த்திக்குக் கட்டியம் பாடுவது போல், கதையை வேகமாய்க் கம்பீரமாய்ச் சூதாய் நடத்துகிறார் இந்தச் ‘சூத’ பௌராணிகர்.

பிரம்மதேவன் தந்தான் நீண்ட ஆயுள். கொள்ளுப்பாட்டன் கொள்ளுப் பேரனுக்குத் தருவது போலவா? அல்லது கொள்ளைக்காரனுக்கு அள்ளித் தருவது போலவா? சிவன் வாளோ இவன் பெரிய கைக்கு வந்துவிட்டதாம். தந்து வந்த தென்றுகூடச் சொல்லவில்லை. ஊசி வேரோடு கைலையைப் பறித்தவன் கைலாஸபதியின் வாளையும் பறித்துக் கொண்டான் என்பது குறிப்பு. வானக் காட்டில் விலகி வட்டமிடும் கிரகங்களையும் சிறைவைத்தவன் எத்தனை சிறைச் சாலைகளைப் பூலோகத்திலே ஜனத்தொகையால் நிறைத்திருக்க வேண்டும்! (சீதைக்குக் குறிப்பாக ஒரு பயமுறுத்தலும்கூட.) இப்பேர்ப்பட்டவன் குணப்பெருங் குன்றாகவும் திகழ்கிறானாம்.



இப்படிக் குண செளந்தரியம் குலாவ, வீர செளந்தரியம் விளங்க, விஜய செளந்தரியம் படர்ந்து சுடர, ஞான செளந்தரியம் ஜொலிக்கக் கொலு வீற்றிருக்கும்போது, இந்திரனுக்கு இந்திரன் மன்மதனுக்கு மன்மதனுகவும் காட்சி வழங்குவதாய்ப் பேசுகிறுன் இந்த முனிவர்க்கு முனிவன்.

கதை முடிந்தது, கல்யாணம் முடியவேணுமே?

'அப்பா குதிருக்குள் இல்லை' என்று சொல்வதுபோல் கொடுமை கிடையாது அந்த ஆட்சியிலே என்கிறுன். பட்சபாதமில்லாத ஆட்சி என்று பாராட்டுகிறுன். தேவர் திகைக்க, மூவர் திகைக்க யாவரும் திகைக்கக் கொலுவிருப்பவன் மன்மதன் திகைக்கும் அழகு வாய்ந்தவன் என்ருல், அந்த மகா மாட்சியுடன் அழகு - மாட்சிமையும் அமையப் பெற்ற அந்த மன்னர் பெருமான் மணமாகாதவன் —பிரம்மசாரி என்ருல், எத்தனையோ கட்டழகிகள் அருள் நோக்கித் தவங் கிடப்பார்களல்லவா? அந்தப் பிரம்ம குலப் பெரியோனுக்கு அதே குலத்தில் அழகி கிடைப்பதுதான் அரிதா?

அவனே காதல் - மணத்தையே விரும்புகிறுன். (தங்கை விரும்பியதும் காதல் - திருமணம்தானே!) எத்தனையோ மணிகள் இருக்க மனத்துக் கினிய ஒரு மாணிக்கம் தேடுகிறுன்:

அனைத்துல கினும்அழ(கு)
அமைந்த நங்கையர்
எனைப்பலர், அவன்தன(து)
அருளின் இச்சையோர்;
நினைத்(து)அவர் உருகவும்
உதவ நேர்கிலன்:
மனக்கினி யாள்ஒரு
மாதர் நாடுவான்!

[எனைப் பலர் — எத்தனையோ பலர். அருளின் இச்சையோர்—அருள் பெறுவதில் இச்சையுள்ளவர்கள். நேர்கிலன்—உடன்படாதவனுய். மனக்கு — மனத்துக்கு.]

'மன்மதன் திகைக்கும் செவ்வியன்' என்று ராவணனைக் குறித்து ராவண சந்யாசி வாயாரப் புகழ்கிறுனே, யார் முன்பு? 'ஸாக்ஷாத் மன்மத - மன்மதன்' என்று முற்றத்துறந்த முனீந்திரரும் திகைத்துப் போயிருக்கும் புருஷோத்தமனின் காதலி முன்பு!

காவியம் இப்போது காதற் கதையாகி விடுகிறது. உண்மையில், கதை முடிந்தது; ஆனல் காதல் மணம்? சரி, இப்படியே போய்க் கொண்டிருந்தால், 'நீர் எங்கிருந்து வருகிறீர்?' என்ற அந்தக் கேள்விக்குப் பதில் வேண்டாமா? அதையும் சொல்லிச் சந்யாசி எப்படிக் கதை முடிக்கிறுன் என்பதை இனிமேல் பார்க்கலாம்.

* * * *

இந்த 'ராவண காவியம்' எப்படி? யாரோ ஒரு குஞ்சுக் கவி, பிஞ்சுக் கவி பாடியதா? சூர்ப்பணகை சீதைவருணனைக் காவியம் பாடினுள். அந்தச் சீதை முன் சூர்ப்பணகைப் பிராட்டியின் அருமைத் தமையன் ஸாக்ஷாத் ராவணேச்வரனே பாடிய ராவண காவியமல்லவா?



296. சாமியார் சீறுகிறார்

'அந்தச் சக்கரவர்த்தியின் ராஜதானியிலிருந்து நான் நேரே இங்கு வந்திருக்கிறேன்' என்கிறான் சந்யாசி. ராவணன் என்ற பெயரைச் சொல்லாமலே 'அந்தத் திவ்ய புருஷன் தனக்கு உற்ற நண்பன்' என்பதை உய்த்துணர வைக்கிறான். அரசாங்க அதிகார ஆடம்பரக் கொலு வைபவங்கள், வீர சூரப் பிரதாபங்கள், குணநிசய வைபவங்கள், இடையிடையே செளந்தரியப் பிரதாபங்கள், அரோக திடகாத்திர சம்பத்து — இவையெல்லாம் பெண்மையுள்ளத்திற்கு உகந்த ரீதியில் அமைய 'ராவண காவிய'த்தை ராவணனே பாடி முடிக்கிறான், ஓர் ஆஸ்தான கவிச்சக்கரவர்த்தி புவிச் சக்கரவர்த்தியைப் பாடும் தோரணையில்.

மாதர் நாடும் தூதர்

'ராவண காவிய'த்தின் முடிவுதான் எவ்வளவு வசீகரமாய், எத்தகைய புதைபொருளுடன் அமைந்திருக்கிறது:

'ஆண்டையான் அரசுவீற்
றிருந்த அந்நகர்
வேண்டியான் சில்பகல்
உறைய வேண்டினேன்,
நீண்டனென் இருந்(து),அவற்
பிரிந்த நெஞ்சினேன்
மீண்டனென்' என்றனன்
வினையம் உன்னுவான்.

[ஆண்டையான் — மேலே சொன்ன தன்மை வாய்ந்தவன். வேண்டி — விரும்பி. சில் பகல் — கொஞ்ச காலம். உறைய — தங்க. நீண்டனென் இருந்து — நெடுங்காலம் தங்கி யிருந்து. அவற்பிரிந்த — அவனைப் பிரிந்த. மீண்டனென் — இங்கு வந்து சேர நேர்ந்தது. வினையம் — வஞ்சனையோடு கூடிய தந்திரம்.]

யாத்திரா மார்க்கத்தில் அந்தத் திவ்ய ராஜதானியிலும் கொஞ்ச காலம் தங்க விரும்பினானும். இந்த விருப்பத்தை அந்த அரசனிடம் தெரிவித்ததாக ஒரு குறிப்பு. பிறகு அங்கேயே நெடுநாள் தங்கும்படி ஏற்பட்டு விட்டதாம். அப்படியிருந்தும் கடைசியில் பிரிய நெஞ்சில்லாமல்தான் பிரிந்து வந்தானும். அந்த அரசனுடைய அதிதி பூஜை, பாகவத பக்தி, கருணை, நட்பு முதலான அபார குணச் சிறப்புக்களை உய்த்துணர வைக்கிறது இந்த ராவண காவியத்தின் இந்த இறுதிச் செய்யுள். இந்த நெருங்கிய நட்பினால் தான்.

மனக்கினி யாள்ஒரு
மாதர் நாடுவான்

என்ற அந்தப் பரம ரகசியமும் அந்த நெஞ்சிலிருந்து இந்த நெஞ்சிற்கு வந்து சேர்ந்திருக்கிறது. உண்மை நட்பில் உடல் இரண்டு, உயிர் ஒன்று; இந்த நட்பிலோ நெஞ்சும் ஒன்று - உடலொருமையும் வாய்த்திருக்கிறதே!

எல்லாவற்றுக்கும் மேலாக இந்தச் செய்யுளின் குறிப்பு: மனசுக்கினிய மாதரை நாடுவானின் மனசுக்கினிய தூதராகச் சாமியார் தம்மை அறிவித்துக் கொள்வது தான்! குறிப்பாகத்தான் அறிவிப்பு. ஆம்; அறிவும் பண்பாடுகளும் வாய்ந்தவர்களிடம் வெளிப்படையாக ஒன்று கூறுவதைக் காட்டிலும் குறிப்பாகக் கூறுவதுதானே காரிய சித்திக்கு வழி.

சீதை கேள்வி



'ராவண காவியம்' முற்றுப் பெற்றதும் 'அப்பேர்ப்பட்ட காவிய நாயகனை மகானுபாவன் யாரோ?' என்று ஏங்கிக் கேட்பாள் இந்த மாது என்றுதான் அந்தச் சந்யாசி எதிர்பார்த்திருக்க வேண்டும். ஆனால் இம்மாதோ,

பாதக அரக்கர்தம்
பதியின் வைகுதற்(கு)
ஏதுஎன்? உடலமும்
மிகையென்(று) எண்ணுவீர்!

[பதி — ராஜதானி நகரம். வைகுதற்கு — தங்குவதற்கு. ஏது — காரணம். என் — என்ன. உடலம் — உடல். மிகை — மிகுதி.]

என்று கேட்டுவிடுகிறாள்.

அதி உஷ்ணப் பிரதேசங்களில் வசிப்பவர் சொக்காயை மிகையென்று எண்ணு

வதுபோல், இந்தச் சாமியார் உடற்சொக்காயையும் மிகையென்று எண்ணி யிருப்பது போலத் தோற்றம் அளிக்கிறாராம். 'இப்படிப்பட்ட நீர் அந்தப் பாதகர் ஊரில் ஏன்தான் தங்கினீர் ஐயா?' என்று சீதை திகைத்தே போனாள்; அந்தத் திகைப்பை அப்படியே கேள்வியாக்கி விட்டாள்.

'மன்மதன் திகைக்கும் செவ்வியன்' என்று சொல்லிச் சீதையைத் திகைக்கச் செய்ய விரும்பினான் சந்யாசி: ஆனால் இப்போது சீதையின் திகைப்பு எப்படி? இது குறித்து ராவணன் ஆலோசிக்கு முன்பே, இந்தத் திகைப்பை அவன் சமாளித்துக் கொள்ளும் முன்பே, சீதை மேலும் பேசுகிறாள்:

'வனத்திடை மாதவர்
மருங்கு வைகலிர்;
புனல்திரு நாட்டிடைப்
புனிதர் ஊர்புக
நினைந்திலிர், அறநெறி
நினைக்கி லாதவர்
இனத்திடை வைகினீர்,
என்செய் தீர்?' என்றாள்.

[வனத்திடை — காட்டிலே. மாதவர் மருங்கு — மகரிஷிகளுக் கருகே. வைகலிர் — தங்கவில்லையே. புனல் திருநாடு — நீர்வளமுள்ள அழகிய நாடு. வைகினிர் — தங்கினீர்.]

'காட்டில் முனிவர்களுடனும் தங்காமல், நதிக்கரை நாட்டில் நன்மக்களுடனும் தங்காமல், கொலை செய்து கொள்ளையடிக்கும் அரக்கர்களுடன் தங்க எப்படித்தான் மனம் வந்ததோ? அந்தோ, என்ன காரியம் செய்து விட்டீர்!' என்கிறாள் சீதை. நீர்வள நிலவளம் இல்லாத நாடுகளில் அக்கிரமங்கள் நடக்கும் என்பது குறிப்பு. ஆனால் சகல வளங்களும் வனப்புக்களும் பொருள்களும் நிறைந்த இலங்கையை யல்லவா அரக்கர்கள் அருளில்லாத ராட்சஸ பூமியாக்கிக் கொண்டார்கள், இயற்கைக்கு மாறான நீதியில்? அது தெரியாமல்தான் சீதை பேசுகிறாள்.

'புனல் - திரு நாடு' என்று சாதாரணமாய்ச் சோழவள நாட்டைக் குறிப்பிடுவதுண்டு. 'புனல் திரு நாட்டிடைப் புனிதர் ஊர்' என்பதில் கம்பனது சோழ தேச பக்தி ஒரு புதை பொருள் எனலாம்.

'அந்தோ, அந்த அரக்கர்களுக்கிடையிலும் தங்கி வந்தீரே, என் செய்தீர்?' என்ற சீதை வாக்கிலே, எத்தகைய திகைப்பும் மாற்றமும் ஏனமும் கண்டனமும் நிறைந்த முகத்தையும் அகத்தையும் பார்க்கிறோம்! இப்படிச் சீதை பேசுவதிலுள்ள இதிகாச பாவத்தைத்தான் என்னென்பது? அந்த அரக்கரிடையே விரைவில் தங்கப் போகிறாளே!

பந்தடிப்பதுபோல் சம்பாஷணை

அரக்கரைப் 'பாதகர்' என்றும் 'அறநெறி நினைக்கிலாதவர்' என்றும் சீதை பேசியதும், 'தேவர்போல் கொடியரல்லர்' என்கிறான் சந்யாசி:

'திங்கள்வாள் முகத்தி னாய்! அத்
தேவரின் தீயர் அல்லர்;
எங்கள்போ லியர்க்கு நல்லார்
நிருதரே போலும்!' என்றான்.

[திங்கள் வாள் முகத்தினாய் — சந்திரன் போல் ஒளி வீசும் முகத்தை யுடையவளே. தேவரின் — தேவர் போல. போலியர்க்கு — போல்வா ருக்கு. நிருதர் - அரக்கர்.]

'தீயவரைச் சேர்ந்தவரும், தீயவரே!' என்று சீதை பதில் சொல்லு கிறாள். அதற்குச் சந்யாசி, 'அறிவீரர்களான அரக்கர்களை அனுசரித்துப் போவதன்றி மக்களுக்குத் தப்பிப் பிழைக்கும் வழிதான் என்ன?' என்று ஒரு கேள்வியால் பதில் சொல்லுகிறான். அரக்கரைக் குறித்து அந்த முனி வன் பயப்படுகிறான் என்று கருதிய சீதை, தர்மமூர்த்தியான தன் கணவன் ராட்சஸ நிக்கிரகம் செய்து விடுவான் என்கிறாள். 'அப்படியானால், ஆனையை முயல் கொல்லுமே! சிங்கத்தையும் மான்குட்டி கொன்று விடாதா?' என்று பரிகசிக்கிறான் அவன்.

'விராதன், கரன் முதலானவர்கள் அழிந்து போன யுத்தச் செய்திகள் ஒன்றும் சுவாமிகள் கேட்டதில்லையோ?' என்று சீதை கேட்கிறாள். 'இலங் கைமா நிருதரெல்லாம் தன் கணவனால் அழிவதையும், வானவர் ஜய கோஷம் செய்வதையும் நாளையே காண்பீர் சுவாமிகளே!' என்றும் சீதை உத்ஸாகப்படுத்த முயல்கிறாள் — இந்தச் சந்யாசியின் ராட்சஸ பயத்தைப் போக்க வேண்டுமென்று தான்!

இன்பமும் சீற்றமும்

சீதை இப்படியெல்லாம் பேசிவந்தும் இந்த ராவண சந்யாசி எப்படித் தான் பொறுமை இழந்துவிடாமல் பதில் சொல்லிக்கொண்டே வருகி றானோ?—என்ற கவலை வேண்டாம். சீதையுடன் பேசுவதே இன்பமா யிருக்கிறதாம். தேனில் தோய்ந்து அமுதம் அளாவிய மென் சொற்கள் செவிகளூடே தவழ்ந்து செல்லுகின்றனவாம். அந்தக் குரலையும் பேச்சை யும் கேட்டுத் தளிர்த்துப் பூரித்துப் போகிறதாம் சந்யாசியின் மெலிந்த உடம்பு. இந்த நிலையிலும் 'மானிடர் இலங்கைமா நிருதர்களை அழிக்க வல்லவர்' என்ற வார்த்தை உள்ளத்திலே கோபத்தை மூட்டி விடுகிறதாம்.

தேனிடை அமுத ளாய
அன்னமென் சிலசொல் மாலை
தானுடைச் செவிக ளூடு
தவழுறத் தளிர்த்து வீங்கும்
ஊனுடை உடம்பி னானும்,
உருகெழு மானம் ஊன்ற,
மானுடர் வலியர் என்ற
மாற்றத்தால் சீற்றம் வைத்தான்.

[தேனிடை—தேனிலே. அமுது அளாய அன்ன—அமிர்தம் அளாவியது போன்ற. மென்சில சொல்மாலை—மென்மையான சில சொற்களின் வரிசை. தான்உடை—தன்னுடைய. தவழுற—தவழ. வீங்கும்—பூரித்துப் போகும். ஊன்—(இங்கே) தசைக்கொழுப்பு. உரு—உருவம். கெழு—நிறைந்த. வலி யர்—வலிமையுள்ளவர். மாற்றம்—வார்த்தை.]

சீதா ராவண சம்வாதம் சிகரத்தை எட்டப்போகும் தருணம். பேச்சின்பத்தை அனுபவித்த வண்ணம் அதனூடே சீற்றமும் பொங்கிய வண்ணமா யிருக்கிறான் ராவணன், — அழகிய பூமாலைகளுக்கிடையே புரண்டு உள்ளுக்குள்ளே சீறி மூச்சுவிடும் விஷப் பாம்பு போலே.



297. பூமாலையும் பாம்பாகிறது

இருபது தோள்களோடு கூடிய புயற்காற்று வீச மனிதப் பஞ்சு பறந்து போகும் என்று சீறியும் திருப்தி அடையாதவனாய், அந்தத் தோள்களின் அற்புதத் திண்மையை மறக்க முடியாதபடி இவள் உள்ளத்திலே ஆழப் பதித்துவிட விரும்புகிறான்.

'மேருவைப் பறிக்க வேண்டின்,
விண்ணினை இடிக்க வேண்டின்,
நீரினைக் கலக்க வேண்டின்,
நெருப்பினை அவிக்க வேண்டின்,
பாரினை எடுக்க வேண்டின்,
பலவினை, சிலசொல், ஏழாய்!
யாரெனக் கருதிச் சொன்னாய்?
இராவணற்(கு) அரிதென்?' என்றான்.

[பார் - பூமி. பல வினை — (இவ்வகையான) பல பெருந்தொழில்களில். சில சொல் — சிலவற்றைச் சொல்லிப் பார். ஏழாய் — பேதைப் பெண்ணே.]

கார்த்த வீரியன் கதை

இது கேட்டும் சீதை சிறிதும் அஞ்சவில்லை. 'பல தோள்கள் இருந்தால், பலம் உண்டோ?' என்று கேட்டு விடுகிறாள். இருபது தோள்கள் பிரமாதமாகத் தோன்றவில்லை, ஆயிரந் தோள்களோடு கூடிய கார்த்தவீரியார்ச்சுனன் கதை கேட்டிருந்தவளுக்கு. அந்த அர்ச்சுனன் இலங்கை வேந்தைச் சிறை வைத்த கதையும் கேட்டிருந்தாள். அந்தத் தோள் - வனத்தையெல்லாம் விறகு தறிப்பதுபோல் கோடாலி கொண்டு வெட்டித் தள்ளிய பரசுராம பராக்கிரமத்தைச் சந்நியாசி காதில் போட்டு வைக்கிறாள். அப்படியாவது இவனுக்கு ராவணபீதி போகட்டும் என்றுதான்:

காண்டநீர் இலங்கை வேந்தைச்
சிறைவைத்த கழற்கால் வீரன்
திரண்டதோள் வனத்தை யெல்லாம்
சிறியதோர் பருவம் தன்னில்
இரண்டுதோள் ஒருவன் அன்றோ
மழுவினால் எறிந்தான்?' என்றாள்.

[காண்டம் — நீர்க் காக்கைகள். கழல் — வீரக்கழல். வீரன் — (இங்கே) கார்த்த வீரியார்ச்சுனன். மழு — கோடாலிப் படை.]

திக்விஜய காலத்தில் ராவணன் மாகிஷ்மதி நகரத்து மன்னனான கார்த்தவீரியனால் வெல்லப்பட்டுச் சிறை வைக்கப் பட்டானாம். அதே கார்த்தவீரியனைப் பரசுராமன் தன் சிறு பிராயத்திலேயே மழுவால் எறிந்து அந்தத் தோள்களை அறுத்துத் தள்ளிவிட்டானாம். இப்படி இரண்டு தோள் —மனிதனின் பராக்கிரமம் பேசியவள், அந்தப் பரசுராமனையும் வலிதொலைத் தருளியவன் தன் கணவன் என்பதைச் சொல்லாமலே விட்டு விடுகிறாள்.

இவள் கண்முன் கிடைத்த வெற்றி அது. காதலின் கன்னி வெற்றி வில்லிறுத்தல் என்றால், இவள் காதலின் இரண்டாவது வெற்றியல்லவா பரசுராம கர்வ பங்கம்? இத்தகைய ராம பராக்கிரமத்தைச் சந்யாசி உய்த்துணருமாறு விட்டு விடுகிறாளா? இவ் வரலாற்றையே இந்தச் சந்யாசி கேள்விப்படாம விருந்தால்?



கதை கிளம்பிய கோபத்திலே

இது எப்படியிருந்தாலும், சீதையின் இந்தக் கடைசி வார்த்தை காதில் விழுந்ததும் இது குறித்து ஆலோசிப்பதற்கோ, உய்த்துணர்வதற்கோ நேரமேது நமது சந்யாசிக்கு? கார்த்தவீரியன் கதை கேட்டதும் என்ன நேர்ந்து விட்டது? உடம்பிற்கு என்ன வந்து விட்டது? கண்களும் தோள்களும் — அடடா, எத்தனை? — ஏன் இப்படி......? இப்படியெல்லாம் நாம் ஆலோசிப்பதற்குள், எரிகின்றன கண்கள் நெருப்பு எரிவது போலே! பூரிக்கின்றன இருபது தோள்கள் எட்டுத் திக்குகளையும் முட்டச் செல்வது போலே. நிமிர்ந்துயரும் தலைகள் மீது மகுடங்கள் உயர்ந்து உயர்ந்து வானத்தை முட்டுகின்றனவா? இடிபோல் சடசட வென்ற சத்தங்கள்! எங்கே சந்யாசி இப்போது? கம்பன் காட்ட நாமும் தெரிந்து கொள்ள வேண்டியது தான்:

என்றவள் உரைத்த லோடும்,
எரிந்தன நயனம்; திக்கில்
சென்றன திரள்தோள்; வானம்
தீண்டின மகுடம்; திண்கை
ஒன்றொடொன் றடித்த; மேகத்(து)
உரும்என எயிற்றின் ஒளி
மென்றன; வெகுளி பொங்க
விட்டது மாய வேடம்!

[திண் கை – வலிய கைகள். உரும் என – இடிபோல. எயிற்றின் ஒளி – பல் வரிசைகள். வெகுளி – கோபம்.]

வெகுளி பொங்கியதும் வேஷம் தானகவே நழுவி விடுகிறது. இப் பாட்டுக்கு மகுடமான

விட்டது மாய வேடம்

என்ற சின்னஞ் சிறு வாக்கியம் நம்முடைய மனேபாவத்திலே மாயமாக எப்படிப் பொருத்திக் காட்டுகிறது, இந்த மாயக் காட்சி முழுமையும்!

சீதா ராவண சம்வாதம் ஆரம்பத்தி லிருந்து இந்த முத்தாய்ப்பு வரை ஆரோகணக் கிரமத்தில் ஏறி வருகிறது சிறிதும் சுவை பிறழாமல், கொஞ்சமும் விரஸம் ஏற்படாமல். இது படிப்போருக்குப் பேரானந்தத்தைத் தருகிறது — என்பது பேறிஞரும் பெரும் புலவருமான வ. வெ. சு. ஐயரின் அபிப்பிராயம்.

பத்துத் தலைப் பாம்பா?

சந்யாசி மறைந்து போகிறான். அந்த இடத்திலே பல தலைப் பாம்பொன்று உக்கிரமாய்ச் சீறிப் படங்களை வரிசையாக விரித்தெழுவது போலத் தோன்றுகிறது ஒரு கணம். மறு கணமே திகைப்பும் பிரமிப்புமாயிருந்த சீதாதேவியின் கண்ணெதிரே தோன்றுகிறான் லோகபயங்கரனை ராவணேச்வரன், பத்துத் தலைகளையும் இருபது கைகளையும் எத்தனையோ பாம்புகளின் படங்கள் போல் பரப்பிய வண்ணம்:

'இருவினை துறந்த மேலோர்
அல்லர்கொல் இவர்?' என் றெண்ணி
அரிவையும் ஐயம் எய்தா,
'ஆர் இவன் தான்?' என்(று) ஒன்றும்

தெரிவரு நிலைய ளாகத்,
தீவிடத்(து) அரவம் தானே
உருகெழு சீற்றம் பொங்கிப்
பணம் விரித்(து) உயர்ந்த தொத்தான்.

[இருவினை — நல்வினை, தீவினை என்ற இருவகை வினைகளையும். அல்லர் கொல்—அல்லர் போலும். அரிவை — பெண்; (இங்கே) சீதாதேவி. எய்தா — எய்தி; அடைந்து. தெரிவரு நிலையளாக — தெரியமாட்டாத நிலைமையை உடையவளாக. தீவிடத்து — தீயைப்போல் கொடிய விஷமுடைய. அரவம் — பாம்பு. உருகெழு சீற்றம் — (கண்டோர்) அச்சமுறும் கோபம். பணம் — படம்.]

காலனையும் அதட்டும் உயிர் !

இப்படி ராவணனைக் கண்டு விட்ட சீதையின் நடுக்கத்தை என்னென்பது ?

மாற்றமொன்(று) இல்லை, செய்யும்
வினை இல்லை, வரிக்க லாகாக்
கூற்றம்வந் துற்ற காலத்(து)
உயிரெனக் குலைவு கொண்டாள்.

[மாற்றம் — வார்த்தை. வினை — செயல். வரிக்கலாகாக் கூற்றம் — எவராலும் கட்டப்படாத எமன்.]

உயிர்களைக் காலபாசத்தால் கட்டும் எமன், எவராலும் தான் கட்டப் படாத காலன் அல்லவா? அந்தக் காலனைக் கண்டு விட்டால் பேச்சேது, செயலேது? சந்யாசி யென்றுதான் அதுவரை எதிர்வாதம் செய்துகொண்டிருந்த ஆசாமி ராவணன்தான் என்று கண்டதும், சீதைக்குப் பேச்சும் வரவில்லை; செய்யக்கூடிய செயலும் ஒன்றும் இல்லையென்றாகி விட்டது. ஆனால் அவன் வாய் திறந்து பயத்தாலும் நயத்தாலும் வசமாக்க முயன்றதும், சீதையும் சிந்தித்து அதட்டிப் பேசத் துணிகிறாள்.

'மண்ணிலே நெளியும் மனிதப் புழுக்களைப் பிரமாதப்படுத்துகிறாயே; இதோ உன்னைத் தின்றுவிடுவேன் !' என்று வெருட்டிப் பேசிய ராவணன் மறுபடியும், 'அப்படி எண்ணினால், பின்பு என் உயிரையும் இழப்பேன்' என்று பிதற்றுகிறான். அவளுடைய தலைமேல் கிரீடத்தை வைத்துப் பார்க்க விரும்பியவன் இப்போது அவளையே கிரீடமாக ஒவ்வொரு தலையிலும் தனித் தனியே வைத்துச் சுமக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறான்.

'இதுதான் என் மனோரதம்; உன்னை அழித்து விடுவதன்று' என்று கோபத் தீர்ப்பைக் காதல்-ராவணன் மாற்றி வெளியிட்டதும், சீதாதேவி தளிர்க் கைகளால் காதுகளைச் சிக்கெனப் பொத்திக் கொண்டு, 'என்ன சொன்னாயடா ராட்சஸா? யாரைப் பார்த்துச் சொன்னாய்? உயிர் இழக்க அஞ்சி ஒழுக்கம் இழப்பதுண்டோ? உக்கிரமான பாணங்கள் மின்னி இடித்துத் தொடர்வதற்கு முன்னமே ஓடி ஒளித்துக் கொள்' என்று எச்சரிக்கை செய்கிறாள்.

* * * *

பூமாலையும் கொடிய பாம்பாகிறது ! 'பிராண நாயகனுக்கு அபாயம் வந்து விட்டதே?' என்று கிலேசித்துக் கொண்டிருந்தவளுக்கு இடிமேல் இடி விழுகிறது. எனினும் எவ்வளவு மனோ தைரியத்துடன் ராவணனையும் அதட்டிப் பார்க்கிறாள் !



298. 'எங்கடா போவதெங்கே?'

தேவர்களையும் வென்று அடிமைகளாக்கி வைத்திருக்கும் சர்வாதிகார வெறியை வீரம் என்கிறான் ராவணன். ஆனால் காமம் சர்வாதிகாரம் புரிகின்றது இந்தச் சர்வாதிகாரியின் மீது, 'விண்ணவர் வெல் செய்ய வென்ற என் வீரம் பாராய்!' என்று சீதையை வெருட்டி வீரம் காட்டும் போதே!

'பாணங்கள் மின்னி இடித்து உன் மார்பில் பாய்ந்து விடுமே' என்று சீதை அதட்டிப் பேசியதும், 'ராம பாணங்களெல்லாம் கல்மலை மேல் எறியும் புஷ்ப பாணங்கள் போலவே இருக்கும்!' என்று பதில் சொல்லுகிறான் ராவணன். அதே சமயம் காம பாணங்கள் நெஞ்சைத் துளைக்கின்றன. தாங்க முடியாமல், 'மோகினிக்கும் ஒரு மோகினிப் பெண்ணே! நீ எனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தால் நான் உன்னைத் தெய்வப் பெண்களுக்கும் மேலான பதவியில் வைப்பேன்!' என்று பிதற்றிய வண்ணம் அருகில் வந்து தரையில் விழுந்து வணங்குகிறான்:

வணங்கினன், உலகம் தாங்கும்
மலையினும் வலிய தோளான்.

'தர்மமே! தஞ்சம்'

திருவுக்கும் திருவாகிய செல்வச் சீதை, பொறுமைக்கும் உருவம் தான்,—இப்போது பொறுக்க முடியாமல் நடுநடுங்கித் தன் கணவனையும் இளையவனையும் கூவிக் கதறுகிறாள்:

'இறைவா! இளையோய்!'
எனஏங் கினளால்,
பொறைநான் உருவா-
னதொர்பொற் புடையாள்

[இறைவா—தலைவனே. பொறை—பொறுமை. பொற்பு—அழகு.]

சீதை ஏங்கி அலறி ராம லட்சுமணரைக் கூவியழைத்ததும்,—இனி மேல் பேச்சுக்கு இடமேது? உடனே தரையோடு பேர்த்தெடுத்துத் தேரில்

வைத்துக்கொண்டு ஆகாய மார்க்கமாகப் போகிறான். பிற்கால நாகரிகக் கொள்கைக்கு இசைவாய்க் கம்பன் இங்கே கொஞ்சம் மாற்றியமைத்திருக்கும் கதை இது. சீதாலட்சுமியை ராவணன் தொடக் கூடாது என்று தான் இந்த மாற்றம். இதற்காக இயற்கைக்கு அதீதமான அம்சம் ஒன்றையும் இதிகாசப் போக்கில் சேர்க்க நேர்ந்தது.

கொஞ்ச நேரம் உடம்பில் உயிரே இல்லை என்று சொல்லும்படியாகச் சீதை மயங்கிப் போகிறாள். மின்னற் கொடிபோல் மயங்கிக் கிடந்தவள், பிறகு நெருப்பிலே விழுந்து வெந்துகொண்டிருக்கும் பூங்கொடி போல் நிலைகுலைந்து துடிதுடிக்கிறாள். இதற்குள் ராவணன் தேர்ப் பாகனை நோக்கி, 'விடு தேரை' என்று கட்டளையிட்டு விட்டான். விழுவதும் புரள்வதும் எழுவதுமா யிருக்கும் சீதை, 'தருமமே! நீ தான் தஞ்சம்' என்று கதறுகிறாள், கண்மூடிய படியே.

பழியா, பூணு ?

கண்களைத் திறந்து பார்க்கிறாள். தேர் வேகமாய்ப் போகிறது, மலைகளையும் மரங்களையும், மயில், குயில், மான், யானை முதலான பிராணிகளையும் தாண்டி. சீதை பித்துப் பிடித்தவள் போல்,

மலையே! மரனே!
மயிலே! குயிலே!
கலையே! பிணையே!
களிறே! பிடியே!


[மரன் — மரம். கலை — ஆண்மான். பிணை — பெண் மான். களிறு—ஆண் யானை. பிடி - பெண் யானை.]

என்று சோகவெறியில் அலறிக் கூவித் தன் நாயகனிடம் செய்தி சொல்லும்படி வேண்டிக் கொள்கிறாள்.

அப்பால், தேர் முன்னோக்கிப் போய்க் கொண்டே யிருக்க, தேரினும் வேகமாய்ப் பின்னோக்கி ஓடும் மனம் காட்டிலிருக்கும் ராமலட்சுமணர்களைக் கூப்பிடுகிறது அவசரமாக; ஆபத்திற்குதவாமல் நாட்டிலிருக்கும் பரதசத்ருக்னர்களையும் அவசரமாய்க் கூப்பிடுகிறது, 'இந்தப் பழி உங்களுக்கும் தானே' என்று:

நிருதா தியர்வேர்
அற,நீள் முகில்போல்,
சரதா ரைகள்வீ-
சினிர்,சார் கிலிரோ?
வரதா! இளையோய்!
மறுவ துமிலாப்
பரதா! இளையோய்!
பழிபூ ணுதிரோ?

[நிருதாதியர் — அரக்கர் முதலிய கொடியோர்கள். நீள் முகில்—பெரிய மேகம். சர தாரைகள்-சர மாரி; பாண மழை. வீசினிர்-வீசிக்



கொட்டினவர்களாய். சார்கிலிரோ — (இங்கே வந்து) சேர மாட்டீர்களா? வாதா — (வேண்டியவர்களுக்கு வேண்டிய) வரங்களைத் தந்தருளும் ரகுநாதா. இளையோய் — லட்சுமணனே. மறு — குற்றம். பரதா, இளையோய் — பரதனே, சத்ருக்னனே. பூணுதிரோ - ஆபரணமாகப் பூண்டு கொள்வீர்களோ.]



எத்தனையோ சோலைகளை, மேலே மேகங்களைத் தாண்டி ரதம் வேகமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது. சீதையின் புலம்பல் ராம லட்சுமணர் காதில் விழ முடியுமா? அயோத்தியிலுள்ள பரத சத்ருக்னரையும் கூவி அழைக்கிறாளே, பெருந்துன்பத்தால் பெரும் பித்துப் பிடித்தவள் போலே! ஆனால், — என்ன ஆச்சரியம்!—சீதையின் அழைப்பிற்கு இணங்கிப் பழிதடைக்கும் விடையும் கிடைத்து விட்டது போல் ஒரு குரல் எங்கிருந்தோ வந்து காதில் விழுகிறது, — 'எங்கடா போவது? எங்கே? நில்லு நில்லு' என்று இடியிடிப்பதுபோல! அரக்கனையும் அதட்டும் குரல் — எங்கிருந்து, எப்படி? — ஆரடா அது?

முதல் முதல் இடிக்குரல். உடனே இரண்டு தீப்பந்தங்கள் எரிவது போன்ற கொள்ளிவாய்ப் பிசாசுக் கண்கள், சீதையையும் ராவணனையும் தூரத்திலிருந்து நோக்குகின்றன. கழுகுப் பார்வை பார்க்கின்றனவே, — யாரது? பார்க்கிறீர்கள்:

என்னும்அவ் வேலை யின்கண்,
'எங்கடா போவ தெங்கே?
நில்நில்'என்(று) இடித்த சொல்லன்,
நெருப்பிடைப் பரப்பும் கண்ணன்,
மின்னென விளங்கும் வீரத்
துண்டத்தன் மேரு என்னும்
பொன்னெடுங் குன்றம் வானின்
வருவதே போலும் மெய்யான்.

[அவ்வேளையின் கண் - அச்சமயத்திலே. மின் - மின்னல். வீரத் துண்டத்தன் - வலிய மூக்கையுடையவன்.]

திடீரென்று நெருப்பைப் பரப்பும் கண்களோடும், மின் வெட்டுவது போல் மின்னிவரும் கழுகு - மூக்கோடும் பொன்மலையொன்று வானத்திலே மிதந்து வருவது போலக் காண்கிறது. ராவணன் தேருக் கெதிரே வருகிறான், வந்து விடுகிறான் ஜடாயு. 'பயப்படாதே' என்று பெண்ணுக்கு அபயமளிக்கிறான்; பயமுறுத்துகிறான் பாவி அரக்கனை.

ஆம்; முதல் முதல் யாரோ ஒரு பெண் என்றுதான் நினைத்து வந்தான், அலறல் கேட்டதும். அரக்கன் அவளைத் தீண்டவில்லை யென்று கண்டதும், கொஞ்சம் கோபத்தை யடக்கிக்கொண்டு,

கெட்டாய், கிளையோ—
டுநின்வாழ் வையெல்லாம்
சுட்டாய்! இதுஎன்—
னதொடங் கினைநீ?
பட்டாய் எனவே
கொடு,பத் தினியை
விட்டே குதியால்;
விளிகின் றிலையால்!

[எனவே கொடு - என்றே எண்ணிக்கொண்டு. விட்டு ஏகுதி-விட்டுப் போய்விடுவாய். விளிகின்றிலை — (அப்படியானால்) செத்துப் போகமாட்டாய்.]

என்று எச்சரிக்கை செய்கிறான். இப்படி மட்டுப்பட்ட கோபமே சுட்டு ஸம்ஸ்காரம் செய்யப் பார்ப்பது போலப் பாய்கிறது அரக்கனை நோக்கி!

வெகு விரைவில் ஜடாயுவுக்கு 'அந்தப் பெண் சாதாரணப் பெண் அல்லள்; தெய்வப் பெண் போன்றவள்; லட்சுமி போன்றவள்; ஒரு பத்தினித் தெய்வம்' என்றெல்லாம் தோன்றுகிறது. 'சீதாலட்சுமிதான்' என்பதும் விரைவில் தெரிந்து விடுகிறது. 'அட மூட்டாள்! என்ன பிழை செய்து விட்டாய்?......' என்றெல்லாம் மறுபடியும் அதட்டிப் பேசுகிறான் ஜடாயு:

பேதாய்! பிழைசெய்—
தனை,பே ருலகின்
மாதா அனையா—
ளைமனக் கொடுநீ
யாதா கநினைத்
தனை?என் னமிலாய்!
ஆதா ரம்நினக்(கு)
இனியா ருளரோ?

ஜடாயு தன் கோபாவேசமாகிய தர்மாவேசத்திலே சீதையைத் தசரதனுக்கும் தனக்கும் மருமகளாகவும் எண்ணவில்லை; 'லோகமாதா' என்றே பேசுகிறான் பயபக்தியுடன். புத்திர ஸ்தானத்திலுள்ள ராம லட்சுமணரையும்,

முத்தே வரின்மூ—
லமுதற் பொருளாம்
அத்தே வர்இம்மா—
னிடரா தலினுல்

என்று பயபக்தியுடன் குறிப்பிட்டு எச்சரிக்கை செய்கிறான் ராவணனுக்கு.

கம்பன் கவிதைக்கு இந்த ராம பக்தி உயிர் என்பர் அறிஞர். இக்கவிஞனின் சீதாராம பக்திதான் இப்படிக் கரை புரண்டு வெளிப்படுகிறது ஜடாயு வாயிலாகவும். ஆனல் பக்தி பலிக்குமா, எச்சரிக்கை பலிக்குமா, பகுத்தறிவு - வீரனை ராவண ஸர்வாதிகாரியிடம்?



299. 'இல்லையோ அறம்?'


ஜடாயுவின் வருகையும், அவன் ராவணனை அதட்டிப் புத்தி சொன்ன தோரணையும் சீதைக்குச் சிறிது ஆறுதல் அளித்த போதிலும், ராவணன் திருப்பி அதட்டிப் பயமுறுத்தியது சீதையையும் பயமுறுத்தி விட்டது, முன்னிலும் இரு மடங்காக. ஜடாயு சீதையைச் செயலாலும் தைரியப்படுத்த வேண்டுமென்று ராவணனோடு பளிச்சென்று போர்செய்யத்தொடங்குகிறான்:

இடிப்பொத்த முழக்கின்,
இருஞ்சிறை வீசி
எற்றி,
முடிப்பத் திகளைப்
படியிட்டு முழங்கு
துண்டம்
கடிப்பக் கடிதுற்றவன்,
காண்தகு நீண்ட
வீணைக்
கொடிப்பற்றி ஒடித்(து),உயர்
வானவர் ஆசி
கொண்டான்.

[இடிப்பு ஒத்த – இடி இடிப்பது போன்ற. முழக்கின் – முழக்கம் உண்டாகும்படி. இருஞ்சிறை – பெரிய சிறகுகள். எற்றி – அடித்துக் கொண்டு. கடிது உற்றவன் – விரைவாக ஓடிவந்த ஜடாயு. காண்தகு – காணத்தக்க அழகு வாய்ந்த. வீணைக் கொடிப் பற்றி – வீணையின் வடிவம் எழுதிய தேர்க்கொடியைப் பிடித்து.]

ராவணன் தன் சங்கீத ஞானத்திற்கு அறிகுறியாக வீணை என்ற சிறந்த இசைக் கருவியின் வடிவைத் தன் தேர்க்கொடியில் அமைத்துக் கொண்டிருக்கிறானாம். அந்தப் பத்து முடிகளை (கிரீடங்களை மட்டுமல்ல, அவற்றைச் சுமக்கும் மூர்க்க மூளைகளையுந்தான்!) அப்படியே தரையில்

தள்ளித் தன் கழுகு - மூக்கினல் கடித்து விடுவோம் என்று சிறகுகளை வீசியடித்து விரைவாகப் பறந்து வந்த ஜடாயு, தன்னுடைய அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள இயலாவிட்டாலும், தேர்க் கொடியையாவது பற்றி ஒடித்துத் தரையில் புரளச் செய்து விட்டானே! இது தேவர்கள் மகிழ்ச்சி. ராவணனுடைய அடிமைத் தேவர்கள், வான வீதியில் நின்று பார்ப்பவர்களின் மகிழ்ச்சிதான். ஆனல் இந்த மகிழ்ச்சியையோ, ஜடாயுவுக்குப் புகழ்ச்சியையயோ வெளிப்படையாக அந்த வானவீதியிலிருந்து பொழிந்து விட முடியுமா பூமாரியாக? எனினும் இந்த மகிழ்ச்சியும் மௌன ஆசியும் உத்ஸாகப்படுத்துகின்றனவாம், கீழே போரிடும் ஜடாயுவை.



போரும் முடிவும்

தனக்கெதிரே வீர அட்டகாசத்துடன் உலகம் நடுங்கக் கை வில்லையும் புருவ வில்லையும் ஒருங்கே வளைத்து, உருக்கிய அரக்கைப் போல் கோபச் சிவப்பைக் கண்ணிலே காட்டி நிற்கும் அரக்கனுடன் போராடுவதற்கு ஜடாயுவுக்கும் எவ்வளவு உத்ஸாகம் வேண்டியிருக்கிறது! ஜடாயுவின் யுத்த உத்ஸாகத்தை மீண்டும் உற்று நோக்கு முன் அரக்கர்கோன் நிற்கும் நிலையைக் கவனிக்கலாம்:

அக்காலை அரக்கன்,
அரக்(கு) உருக்கு அன்ன
கண்ணன்,
எக்காலமும் இன்னதொர்
ஈடழி வுற்றி-
லாதான்,
நக்கான் உலகேழும்
நடுங்கிட, நாகம்
அன்ன
கைக்கார் முகத்தோடு
கடைப்புரு வம்கு-
னித்தான்.

[அக்காலை - அப்பொழுது. அரக்கு உருக்கு அன்ன கண்ணன்—உருக்கிய அரக்கைப்போல் மிகச் சிறந்த கண்களையுடையவன். இன்னதொர் ஈடழிவு — இத்தன்மையானதொரு பெருமைக் கேடு. உற்றிலாதான் — அடைந்திலாதவன். நக்கான் — பெருஞ் சிரிப்புச் சிரித்தான். நாகம் — (இங்கே)

மலை அல்லது மலைப்பாம்பு. கார்முகம் — வில். கடைப் புருவம் - கடைப் புருவங்களின் நுனி. குனித்தான் - வளைத்தான்.]

இனி, அரக்கனுடைய அந்த அம்பு மழைகளுக்கிடையே அகப்பட்டுக் கொண்ட ஜடாயு எப்படியெல்லாம் தற்காப்புச் செய்து கொள்கிறான், பார்க்கலாம். மழைக்கிடையே நின்று சிறு பையன்கள் தங்கள் இயற்கை - வேகத்தின் நிறைவு தோன்ற நெடுந் தாரைகளை அடித்தும், கைகால்களால் தாக்கியும், முகத்தை நிமிர்த்தி மழைத் தாரைகளை ஏந்தித் துண்டித்தும் விளையாடுவது போல் இந்தப் போர் - விளையாட்டையும் நடத்துகிறானா ஜடாயு ?



சண்டப் பிறைவாள்
எயிற்றான் சரதாரை
மாரி
மண்டச், சிறகால்
அடித்தான் சில; வள்ளு -
கிரால்
கண்டப் படுத்தான்
சில;காலனும் காண
உட்கும்
துண்டப் படையால்
சில, துண்ட
துண்டங்கள்
கண்டான்.

[சண்டப் பிறைவாள் எயிற்றான் — பிறைச் சந்திரன் போல ஒளிரும் உக்கிரமான வக்கிர தந்தங்களையுடைய ராவணன். சரதாரை மாரி — (ராவணனின்) அம்புகள் என்ற தாரை மழை. மண்ட — அதிகமாய் நெருங்கிவர. வள் உகிரால்—கூர்மையான கால் நகங்களால். கண்டப் படுத்தான் சில. — சில அம்புகளைக் கண்டதுண்டமாக்கினான். காலனும் காண உட்கும்—எமனும் காண அஞ்சும். துண்டப் படை — மூக்காகிய ஆயுதம். சில, துண்ட துண்டங்கள் கண்டான் - சில அம்புகளைத் துண்டு துண்டாக ஒடித்துப் போட்டுவிட்டான்.]

ஜடாயு அம்புகளை அடித்துத் தள்ளி வில்லையும் பறித்து ராவணனுடைய சாரதியையும் கொன்று தள்ளுகிறான். எனினும் ராவணன் ஒரு கதாயுதத்தால் ஜடாயுவை அடித்துக் கீழே தள்ளிவிட்டுத் தன் தேரைத்

தானே ஓட்டப் பார்க்கிறான். ஜடாயுவோ தன் துன்பத்தைப் பொருட்படுத்தாமல் சீதையைக் காப்பாற்றவேண்டும் என்ற ஒரே நோக்குடன் ராவணனுடைய கதாயுதத்தைப் பறித்தெறிந்து தேரையும் அழித்து விடுகிறான். கடைசியாக ராவணன் தன் வாளாயுதத்தை விசையாக வீசி ஜடாயுவின் சிறகுகளை அறுத்துத் தள்ளிவிடுகிறான்.

ஆனால், பள்ளிப்பிள்ளைகளுக்குச் சரித்திரம் முதலான பாடங்களைப் 'பரீட்சைப் போர'களுக்காகச் சுருக்கிக் கொடுக்கும் உபாத்தியாயர்கள் போல் நாமும் இப்போரை மேலே சொன்னபடி சுருக்கிக் கொடுத்துவிட்டால் போதுமா? இந்தப் போரை வருணிக்கும் கம்பனுடைய பல பாடல்களிலுமுள்ள சப்த ஜாலங்களைப் படித்துப் படித்துப் பாடிப் பாடி அனுபவிக்கும்போது தான், ஜடாயு கொத்திக் கொத்திக் குத்திக் குத்தியும், தத்தித் தத்திச் சுற்றிச் சுற்றியும் ராவணனுடைய சிரத்திலும் வெற்றிக் காத்திலும் சீறி அடிப்பதம் இடிப்பதம், அம்பு மழைகளுக்கிடையே எதிர்த்தேறி ராட்சஸ உடம்பெங்கும் கீறுவதும் எல்லாம், மனக்கண்ணுக்குத் தெளிவாகப் புலப்படும். ஜடாயுவை எதிர்த்து அம்புகள் போட்டும் சூலம் வீசியும் கடைசியாக வாளால் வெட்டியும் போராடி வெற்றி கொள்ளும் அரக்கர் கோனின் சூரத்தனமும் நம் மனக்கண்ணுக்கு உள்ளபடி இலக்காக வேண்டுமென்றால், கவிஞனுடைய இந்த யுத்தப் பாடல்களை மீண்டும் மீண்டும் அனுபவித்துப் பார்க்க வேண்டியது தான்.

வெல்வது நரகமா?

ஜடாயு விழுந்தது கண்ட சீதையின் சோகம் இப் போர்வருணனைக்குச் சிகரம்போல் அமைகிறது.

'அல்லலுற் றேனைவந்(து)
 "அஞ்சல்" என்றஇந்
நல்லவன் தோற்பதே!
 நரகன் வெல்வதே!
வெல்வதும் பாவமோ?
 வேதம் பொய்க்குமோ?
இல்லையோ அறம்?'என
 இரங்கி ஏங்கினாள்.

[அல்லல் உற்றேனை—அல்லற்பட்ட என்னை. அஞ்சல்—அஞ்சாதே.]

என்று வருணனையற்ற, பேச்சுத் தமிழ் போன்ற, அபூர்வ எளிமை வாய்ந்த பாஷையில் துன்ப உணர்வின் உச்சநிலையைச் சுட்டிக் காட்டி விடுகிறான் கவிஞன்.

இந்தச் சீதையின் கூக்குரலை இன்றும் கோடிக் கணக்கான மக்களின் கூக்குரல்களில் கேட்கத்தான் செய்கிறோம். 'இல்லையோ அறம்?'— எவ்வளவு பெரிய கேள்வி, சின்னஞ் சிறு தமிழ்ச் சொற்கள் இரண்டிலே? விஞ்ஞானமும் அஞ்ஞானமும் ஒருங்கே மருண்டு கேட்கும் இக் கேள்விக்கு விடையளிக்கத் துணிகிறது இராமாயணம் என்ற பிரபஞ்ச நாடகம்.



300. சிறிய தாயின் பெரிய நாடகமா?

இனி நம்மைத் தடுப்பார் யாரும் இல்லை; சீதையை விரைவில் இலங்கையிலே கொண்டு போய்ச் சேர்த்து விடவேண்டும் என்று அரக்கன் தீர்மானித்தான்—சிறகிழந்தவனின் நிலைமையும், உதவி இழந்தவள் தனிமையும் நோக்கியவனாய். ஆனால் கொண்டு போகத் தேர் இல்லையே — ஜடாயு தகர்த்து விட்டானல்லவா? ஆகவே, தோள்மீது தூக்கிவைத்துக் கொண்டு போனதாகத் தான் கதை நடக்கவேண்டி யிருக்கிறது. கவிஞனோ ஏற்கெனவே, சீதையை அவள் இருந்த தரையோடும் ராவணன் தூக்கி யெடுத்துத் தேர்மேல் வைத்துக்கொண்டு வந்ததாகச் சொல்லி யிருக்கிறான். தேர் சிதைந்ததும் அந்த மண்ணும் சிதறிப் போயிருக்க வேண்டுமே, சண்டையின் சண்டமாருத வேகத்திலே; எனினும்,

வாங்கினன் தேரிடை
வைத்த மண்ணொடும்,
விங்குதோள் மீக்கொடு
விண்ணின் ஏகினன்.

[வாங்கினன் — எடுத்தவனாய். வீங்கு — பருத்திருக்கும், தோள் மீக்கொடு — தோள்மீது வைத்துக் கொண்டு.]

தருமவேலியும் தகருமா?

அந்த அழிந்த தேரில், அரக்கன் தூக்கி வைத்த தரையும் சீதையைப் போல் வடுப்படாமல் இருக்கிறது! இருக்கட்டும்: எப்படியாவது கம்பன் கற்பனையை ஒருவாறு புரிந்துகொண்டு மேலே செல்ல வேண்டியது தான். கற்பனையோ பகுத்தறிவு செய்யும் எதார்த்த வாதங்களைக் காதில் போட்டுக் கொள்ளாமலே சிறகடித்து, (சிறகிழந்தது ஜடாயுதானே?) பாய்ந்து போகிறது இலங்கை நோக்கி, — ராவணன் செல்லும் வான வீதியில், அதே வேகத்தில்.

வேகத்தின் அதிர்ச்சியால் கண்ணும் மனமும் சுழலச் சீதை அயர்ந்து மூர்ச்சித்துப் போகிறாள். (இந்த உபாயம், துன்ப சிகரத்தின்மீது கற்பனை வீணாய்ச் சுழலாமலிருக்கவும், தருமத்திற்கு வேறொரு வேலி போடவும் தான்.) ஜடாயுவோ தன் மரண வேதனையையும் கவனியாமல் அந்த வஞ்சனைப் படுவேகத்தைப் பார்த்து,

வந்திலர் மைந்நர்; நம்
மருகிக்(கு) எய்திய
வெந்துயர் துடைத்தனன்
என்னும் மெய்ப்புகழ்
தந்திலர் விதியினர்,
தரும வேலியைச்
சிந்தினர்; மேல்இனிச்
செயல்என் ஆம்கொலோ?

[மருகி — மருமகளான சீதை. துடைத்தனன் — நீக்கினேன். என் ஆம்கொலோ — என்ன ஆகுமோ.]

என்று ஏங்கிப் போகிறான். ஆம், இந்தத் 'தரும வேலி'க்கு ஒருவகைப் பாதுகாப்பே, சீதையைத் தரையோடும் தூக்கிச் சென்ற கற்பனை.

சிந்தனை, மானம், காதல்

சீதைக்காகவும் ராம லட்சு மணருக்காகவும் கவலைப்படும் ஜடாயுவுக்கு அரக்கன் தனக்கு ஏற்பட்டிருந்த சாபத்தால் சீதையைத் தீண்டவில்லை என் பது ஒருவாறு ஆறுதல் அளிக் கிறது. ஆனால் ராமலட்சுமணர்



இருவரும் சீதையைத் தனிமையாக விட்டுப் போனதற்குத்தான் காரணம் என்ன? அவர்கள் இவளுடன் இருந்தால் இந்த ஆபத்து ஏற்பட்டிருக்க முடியுமா? 'நடந்தது இன்னதென்று ஊகிக்க முடியவில்லையே? ஏதோ வஞ்சனை! இந்த அரக்கனின் வஞ்சனை, அந்தச் "சிறிய தாய் வஞ்சனை" என்கிற மகா நாடகத்தின் முடிவுதானோ?' என்றெல்லாம் குழம்புகிறது, ஏங்குகிறது ஜடாயுவின் தரும உள்ளம்:

சிற்றவை வஞ்சனை
 முடியச் செய்ததோ?

[சிற்றவை – சிறிய தாயாரான கைகேயி.]

தளர்ச்சி வர வர அதிகப்படுகிறது; இரத்தம் பெருகிக் கொண்டிருக்கிறது. சோர்ந்து தூங்குவது போலக் கிடக்கிறான். எனினும் உள்ளத்திற்குள்ளே 'மருமகளை விடுவித்தோ மில்லையே' என்ற மானம் — மக்களைக் காணவேணுமே யென்ற காதல்! இந்த மானமும் அந்தக் காதலும் நெஞ்சுக்குள்ளே நிலைத்திருக்க, எளிதாக வெளியே குதித்து விடுமா உயிர்? என், உள்ளுணர்வும் நீங்கவில்லையாம்; உள்ளுக்குள்ளே அடங்கி ஒடுங்கிக் கிடக்கிறதாம்:

அஞ்சிறை குருதியால்
 அழிந்து, சோர்வுற,
'வஞ்சியை மீட்கிலேன்'
 என்னும் மானமும்,
செஞ்செவே மக்கள்பால்
 சென்ற காதலும்
நெஞ்சுறத், துயின்றனன்,
 உணர்வு நீங்கலான்.

[அஞ்சிறை – அழகிய சிறகுகள். குருதி – இரத்தம். வஞ்சி – வஞ்சிக் கொடி போன்ற சீதை. மீட்கிலேன் – மீட்கமாட்டாதவன் ஆனேன். செஞ்செவே – மிகவும் செவ்வையாக. நெஞ்சுற – நெஞ்சுக்குள்ளே நிறைந்து நிற்க.]

சீதையின் சிறை

இதற்குள்ளே, விண்வழிச் சென்ற அரக்கர்கோன் தன் இராஜதானி நகரம் அடைந்து அங்கே அசோக வனத்திலே சீதையைச் சிறை வைக்கிறான், அரக்கியர் குழாம் சூழ்ந்து காவல் செய்ய:

வஞ்சியை அரக்கனும்
 வல்லை கொண்டுபோய்ச்
செஞ்செவே திருவுருத்
 தீண்ட அஞ்சுவான்,
நஞ்சியல் அரக்கியர்
 நடுவண் ஆயிடைச்
சிஞ்சுப வனத்திடைச்
 சிறைவைத் தானரோ.

[வஞ்சி — சீதை. வல்லை — விரைவில். அஞ்சுவான் — அச்சமடைந்தவனாய். நஞ்சு இயல் — நஞ்சை ஒத்த. நடுவண் — நடுவிலே. ஆயிடை — அவ்விடத்தில். சிஞ்சுப வனம் — அசோக வனம்.]

* * * *

சீதையை இப்படி விட்டு, ஜடாயுவையும் அப்படி விட்டு விட்டு, சீதையை விட்டுப் போன லட்சுமணனைத் தொடர்ந்து போவோம். கவிஞனுடைய ஞானரத மகிமையால் கழிந்த காலத்தினிடையே சிறிது பிரவேசிப்போம். இதே சமயம் அயோத்திக்கு அருகே கிராம வாசஞ் செய்யும் பரதனையும் பார்க்க முடிகிறது இதே ஞானரத மகிமையால் :

ஒருமகள் தனிமையை
உன்னி உள்ளுறும்
பருவரல் மீதிடப்
பதைக்கும் நெஞ்சினன்,
பெருமகன் தனைத்தனி
பிரிந்து பேதுறும்
திருநகர் தீரும்,அப்
பரதன் செய்கையான்

[ஒரு மகள் — ஒப்பற்ற சீதை. உன்னி — நினைத்து. உள்ளுறும் பருவரல் — உள்ளத்தில் பொருந்திய துன்பம். மீதிட — அதிகப்பட. பெருமகன் — புருஷோத்தமனான ராமன். பேதுறும் — வருத்தத்தில் மூழ்கிக் கிடக்கும்.]

என்று, பெருமகனின் இருபெருந் தம்பியரின் சோகங்களை ஒப்பிட்டு உருகிப் போகிறோம்.

இந்தச் சோகக் கதை போகும் போக்கிலே பரதனுடைய அந்தச் சோகத்தையும் நாம் மறந்து விடாதபடி வேகமாகச் சாதுரியமாக ஞாபகப் படுத்தி விட்டு, லட்சுமணன் கண்குளிர அண்ணனைக் கண்ட வைபவத்தை, அந்தத் தம்பியின் [எக்களிப்புடன், தானும் கண்டு நமக்கும் காட்டுகிறான் கவிஞன் :

தென்டிரைக் கலமென
விரைவிற் செல்கின்றான்,
புண்டரீ கத்தடங்
காடு பூத்தொரு
கொண்டல்வந்(து) இழிந்தன்ன
கோலத் தான்தனைக்
கண்டனன் மனமெனக்
களிக்கும் கண்ணினன்.

[தென் திரைக் கலம் — தெளிவான அலைகளுக்கிடையே ஓடும் கப்பல். புண்டரீகத் தடங்காடு — செந்தாமரைப் பூக்களின் பெருந்தொகுதி. கொண்டல் — நீர்கொண்ட மேகம். இழிந்தன்ன — மேலே இருந்து கீழே இறங்கி வந்தது போன்ற. கோலத்தான் — அழகன்.]